விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 11 செவ்வாய்க்கிழமை (25.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 188

# மாகாண முறைமையை மாற்ற ஒருபோதும் அனுமதியோம்!

## சிரேஷ்ட அமைச்சர்கள் சூளுரை



இலங்கையில் மாகாண சபை முறைமையை மாற்ற இடமளிக்கப்போவதில்லை என்று அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர்கள் சூளுரைத்துள்ளனர். கொழும்பில் நேற்று நடந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பேசிய குறித்த அமைச்சர்கள் மாகாண சபை முறைமையை மாற்றியமைக்கும் எந்தவொரு அரசியலமைப்புத் திருத்தத்துக்காகவும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை அரசாங்கத்துக்கு வழங்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## சம்பூர் அனல் மின் ஒப்பந்தம் காலவரையின்றி ஒத்திவைப்பு

(கொழும்பு)

13-வது திருத்தச் சட்டமூலம் தொடர்பிலான சர்ச்சை தற்போது உச்சமடைந்துள்ள நிலையில், சம்பூர் அனல்மின் நிலையத் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்கும் விடயத்தில் மேலும் தாமதம் ஏற்படலாமென இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

இதன்படி, இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நடவடிக்கை காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக, சம்பூர் அனல் மின் நிலையத்திற்கான அமைச்சரவை அனுமதியை வழங்கி விரைவில் அதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இலங்கை அரசாங்கம் உத்தேசித்திருந்தது.

எனினும், 13-வது திருத்தச் சட்டமூலம் தொடர்பிலான சர்ச்சை எழுந்துள்ள தற்போதைய சூழ் நிலையில் இந்த உத்தேச தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அரசமைப்பில் முக்கியமான திருத்தங்களைச் செய்வதற்கு இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டனர்

தமிழ்நாட்டின் குன்னூரில் உள்ள வெலிங்டன் இராணுவ பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று வந்த இலங்கை இராணுவ அதிகாரிகள் இரண்டுபேரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத்தின் இரண்டு அதிகாரிகளுக்கு நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள வெலிங்டன் இராணுவ முகாமில் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இதற்கு தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து வந்தன. அண்மையில், (20ஆம் பக்கம் பார்க்க)

## '13' குறித்துப் பேசவே கொழும்பு வருகிறார் மேனன்

### நாராயணசாமி உறுதி

(சென்னை)

"இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்புக்கான தனது பயணத்தின்போது 13-வது திருத்தச் சட்டமூல விவகாரம் குறித்தே முக்கியமான பேச்சுக்களை நடத்துவார். அதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை."- என இந்திய மத்திய இணையமைச்சர் நாராயணசாமி, தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து பேசுவதற்காக மட்டுமே சிவ்சங்கர் மேனன் கொழும்பு வருகிறார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடான சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சிவ்சங்கர் மேனனின் கொழும்புப் பயணம் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட இந்திய மத்திய அமைச்சர் நாராயணசாமி மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

"13வது (20ம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட்டில் பாதுகாப்பு வழங்கப்படாதது ஏன்?

### பிரித்தானியாவிடம் இலங்கை கேள்வி



பிரித்தானியாவில் நடைபெற்ற இலங்கை - இந்திய கிரிக்கெட் போட்டியின்போது புலிக்கொடி ஏந்திய புலம்பெயர் தமிழர்கள் சிலரால் இலங்கை அணி வீரர்களுக்கு அச்சுறுத்தல் நிலவியபோது, தகுந்த பாதுகாப்பு (20ம் பக்கம் பார்க்க)

## காணி சுவீகரிப்பு யாழில் மும்முரம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த காணிகள், வீடுகள் மற்றும் ஏனைய சொத்துக்களை அரச உடைமையாக்கும் நடவடிக்கை யாழ்.மாவட்டத்திலும் மிகவும் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான காலப பகுதியில் வட மாகாணத்தில் இவ்வாறு பல காணிகள், வீடுகள் மற்றும் ஏனைய சொத்துக்கள் அரசாங்க உடைமையாக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கூட யாழ். செம்மணிப் பகுதியில் ஒருகாணி தமிழ் (20ம் பக்கம் பார்க்க)

## இன்னொரு பாகிஸ்தானாக இலங்கை உருவெடுத்தால்!

### இந்தியாவுக்கு நெருக்கடியே - நாச்சியப்பன்



(கோவை)

இலங்கை இன்னொரு பாகிஸ்தானாக மாறுவதை இந்தியா விரும்பவில்லை என இந்திய மத்திய இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

குன்னூர், வெலிங்டனில் இலங்கை படைஅதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுவது குறித்து, கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கைப் படை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க இந்தியா மறுப்புத் தெரிவித்தால், அவர்கள் சீனாவுக்கு அனுப்புவார்கள். இலங்கைக்கு (20ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பொன்சேகாவிற்கு மீண்டும் நீதிமன்றம் அழைப்பாணை



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மீண்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவை கொலை செய்ய முயன்றதாக குற்றம் சாட்டப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மூவருக்கு எதிரான வழக்கில் சாட்சியமளிப்பதற்கு சமுகமளிக்குமாறே நீதிமன்றத்தினால் இரண்டாவது தடவையாகவும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

வழக்குத் தாக்கல் செய்தோர் சார்பில் சாட்சியமளிப்பதற்காக செப்டெம்பர் 23-ம் திகதி ஆஜராகுமாறே மேல் நீதி மன்றத்தினால் நேற்று திங்கட்கிழமை அழைப்பாணை விடுக்கப்பட்டது.

இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்காக முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா சமுகமளிக்காததை அவதானித்த நீதிபதி குமுதினி விக்ரமசிங்க அவருக்கு இரண்டாவது தடவையாகவும் அழைப்பாணையை அனுப்புமாறு நேற்று உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களான செ.கிருபாகரன், ச.சூரியகுமார் மற்றும் த.பிரகாஷ் ஆகியோர் சிறைச்சாலைகள் அதிகாரிகளினால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

எனினும் சாட்சியமளிப்பதற்கு முன்னாள் இராணுவத்தளபதி சமுகமளிக்காமையினால் இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஹனிப்பா மொஹமட் சித்திக் மாஜ் என்ற பெண்; கொழும்பு, நம்புக்கனை, வெலிவேரிய ஆகிய இடங்களில் 2006-ம் ஆண்டு ஜனவரி 01-ம் திகதி தொடக்கம் ஏப்ரல் 25-ம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் புலிகளின் உறுப்பினரான துர்காவுடன் இணைந்து முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை கொலை செய்ய சதிசெய்ய முயன்றதாக சந்தேகநபர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (செ-11)

# ஊடக ஒழுக்கக் கோவையை அரசு மீளப் பெறவில்லை

## அமைச்சர் ஹெக்லிய தெரிவிப்பு



ஊடகங்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் பிரேகரிக்கப்பட்ட ஒழுக்கக் கோவையை உரிய ஆதரவு இல்லாத காரணத்தால் அரசாங்கம் மீளப் பெற்று விட்டதாக வெளிவந்த சில செய்திகள் பொய் என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

ஊடகங்களுக்கான ஒழுக்கக் கோவையை ஏற்பதா இல்லையா என்பது ஊடகங்களைப் பொறுத்த விடயம். அதேவேளை அதன் மூலமான விளைவுகளுக்கு ஊடகவியலாளர்களே பொறுப்பேற்க வேண்டும்.

ஊடகங்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் பிரேகரிக்கப்பட்ட ஒழுக்கக் கோவையை உரிய ஆதரவு இல்லாத காரணத்தால் அரசாங்கம் வாபஸ் பெற்று விட்டதாக வந்த சில செய்திகள் பொய்யானவை. இது குறித்த முடிவை எடுப்பதற்கான சுதந்திரத்தை ஜனாதிபதி ஊடகவியலாளர்களுக்கே விட்டு விட்டார்.

ஊடகங்களுக்கான இந்த ஒழுக்கக் கோவை குறித்த விடயங்கள் தொடரும். அவை குறித்து ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனையவர்களின் கருத்துக்கள் பெறப்படும். சில தரப்பினர் எதிர்த்தால் அவர்களது கருத்தையும் அமைச்சு ஏற்கும். இதற்கான இறுதி முடிவுகளை ஊடக அமைச்சு கவனத்தில் எடுக்கும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் இப்படியான தொடர்புசாத ஒழுக்கக் கோவை ஒன்றைக் கொண்டு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கரு ஜயசூரிய போன்றோரே வலியுறுத்தியதாகவும் ஹெகலிய குறிப்பிட்டார்.

ஆனால் இது குறித்து கருத்து வெளியிட்ட கரு ஜயசூரிய, அரசாங்க ஊடகங்களுக்காக ஒழுக்கக் கோவை ஒன்றையே தாம் கேட்டதாகவும் தனியார் ஊடகங்களுக்கான ஒழுக்க கோவையை தாம் கோரவில்லை என்றும் கூறினார். (செ-11)

# சாரதி அனுமதிப் பத்திரம் கோரி புத்த பிக்குகள் வழக்குத் தாக்கல்

பௌத்த பிக்குகளுக்கு வாகன சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதைத் தடைசெய்வதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முடிவை ரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவொன்றை தொடர்ந்தும் விசாரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

வஷ்கடுவ ஷாக்கியமுனி விகாரையின் தலைமை பிக்கு பரகொட விமலவன்ஸ தேரர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

பிக்குகள் வாகனங்களை ஓட்டக்கூடாது என்று புத்த பகவான் எந்தக் தடையையும் விதிக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மற்றைய நாடுகளில் புத்த பிக்குகளுக்கு சாரதி அனுமதி பத்திரம் வழங்கப்படுவதாகவும் இலங்கையில் பிக்குகளுக்கு அனுமதி பத்திரம் வழங்காமலிருக்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தின் மூலம் தனது உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் விமலவன்ஸ தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வழக்கை விசாரிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லையென்று அரசதரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்தில் ஆட்சேபம் தெரிவித்தார்.

ஆனால் இந்த ஆட்சேபத்தை நிராகரித்த நீதிமன்றம் மனுவை தொடர்ந்து விசாரிப்பதற்கு அனுமதியளித்ததாக விமலவன்ஸ தேரர் குறிப்பிட்டார்.

மேலும் வீதிக்கு சென்றால் பஸ் நிறுத்துவதில்லை. பஸ்ஸில்ஏறினால் இருக்கை கிடைப்பதில்லை. இப்படியான பிரச்சினைகளுக்கு மத்தியில்தான் பிக்குகளுக்கு சாரதி அனுமதி பத்திரம் வேண்டும் என்கிறோம் .

கௌதம புத்தர் இன்று இருந்தால் அவரும் எமது வேண்டுகோளை ஆதரிப்பார் என்றும் அவர் கூறினார் .

அடுத்த கட்ட விசாரணை வளரும் அக்டோபர் 22-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-11)

# பஸ்-மோ.சைக்கிள் விபத்து; பெண் ஸ்தலத்தில் பலி

மட்டக்களப்பு நாவற்குடா பிரதேசத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாவற்குடா பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பப் பெண்ணொருவர், தனது மகனை ஏற்றிக் கொண்டு பிரத்தியேக வகுப்புக்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மூதூரிலிருந்து கல்முனையை நோக்கி சென்று கொண்டிருந்த பஸ் வண்டியொன்றுடன் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஈஸ்வரராஜ் நானேஸ்வரி (வயது 47) எனும் குடும்பப் பெண் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவரது மகனான தனுஜன் (வயது 10) படுகாயமடைந்து ஆரையம்பதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)



பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் முகமட் சுகிர் ரகுமான், வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது...

# தொலைபேசியூடாக வர்த்தகர்களிடம் கப்பம் கோரப்படுகிறது

## யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்களிடம் தொலைபேசி ஊடாக அழைப்பினை ஏற்படுத்தி இனம்தெரியாத நபர்களினால் கப்பம் கோரப்பட்டு வருவது தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக வர்த்தகர்களிடம் தொலைபேசி ஊடாக அழைப்பினை ஏற்படுத்தி இனம்தெரியாத நபர்கள் கப்பம் கோரி வருவதாக வெளியான தகவல் குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு வர்த்தகர்களிடம் கப்பம் கோரி எச்சரிக்கை விடும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரிடம் தாம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)





**வீடு விற்பனை**

சுழிபுரம் கல்ல வேம்படியில் வீடு, வளவு ( 2பரப்பு) விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:**

தெ.பே: 0773301041, 0776036088

(3116)


# மஞ்சள் கடவையில் விபத்து; பொலிஸ், யுவதி காயம்

(குருமன்காடு)

வவுனியா ஏ9 வீதியில் தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள மஞ்சள் கடவையில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் பொலிஸ் உத்தியோகத்தரும் மோட்டர் சைக்கிளை செலுத்தி வந்த யுவதியும் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலைக்கு முன்னால் உள்ள மஞ்சள் கடவையில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது வவுனியா நகரில் இருந்து வந்த தனியார் வைத்தியசாலை ஒன்றின் தாதியர் ஒருவர் தான் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாது பொலிஸ் உத்தியோகத்தர் மீது மோதி விபத்துக்குள்ளாக்கியுள்ளார்.

இதனால் குறித்த மோட்டார் சைக்கிளை செலுத்திவந்த யுவதியும் கடமையில் இருந்த பொலிஸாரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எது தகுதி?

ஓர் ஆட்சித் தலைவர் இருந்தார்.

அவருடைய தேசத்தில் மாநிலங்களை நிர்வாகம் செய்வதற்காக ஆளுநர்கள் இருந்தார்கள். ஒரு மாநிலத்தில் ஆளுநர் பதவி வெற்றிடமாக இருந்தது. அந்தப் பதவிக்கு இரண்டு பேரைப் பரிந்துரை செய்திருந்தார்கள்.

அவர்களிருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்காக அவர்களைத் தன் வீட்டிற்கு வந்து சந்திக்குமாறு கட்சித் தலைவர் அழைத்திருந்தார்.

குறித்த நேரத்தில் ஒருவர் மட்டும் வந்து சேர்ந்தார். வணக்கம் சொல்லி அருகில் அமர்ந்தார். அன்பாகப் பேசினார்.

அவருடைய முகம் தெளிவாக இருந்தது. போட்டிருந்த உடையும் மிகவும் அழகாக சுத்தமாக இருந்தது.

அளவுக்கு அதிகமாக எந்த வார்த்தையும் அவர் உபயோகப்படுத்தவில்லை. அவர் எல்லா வகையிலும் ஒரு நல்ல தலைவராக இருப்பதாக அந்த ஆட்சித் தலைவர் உணர்ந்தார். அவர்கள் இருவரும் சம்பாசித்துக் கொண்டிருந்தனர்.

இன்னொருவர் இன்னும் வந்து சேரவில்லை.

குறிப்பிட்ட நேரம் கடந்து விட்டது.

சிறிது நேரத்தில் அவசர அவசரமாக அவர் ஓடி வந்து சேர்ந் தார். வந்ததும் காலதாமதம் ஆனதற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அப்படிக்கேட்டுக்கொண்டே தன்னுடைய உடையில் படிந்திருந்த புழுதியைக்கையால் தட்டி சுத்தப்படுத்திக் கொண்டார். அதன் பின் சொன்னார்.

தலைவரே! தாமதமாக வந்ததற்கு என்னை மன்னிக்க வேண்டும். நான் முன்னாடியே புறப்பட்டு வந்து கொண்டிருந்தேன். வரும் வழியில் வயதான அம்மா ஒருத்தரைப் பார்த்தேன். அவருடைய கழுதையின் கால்கள் இரண்டும் பாறைகளுக்கு நடுவில் மாட்டிக்கொண்டு இருந்தது. அதை வெளியே எடுப்பதற்கு அந்த அம்மா மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

அதைப்பார்த்த பின்னரும் விட்டிட்டு வர முடியவில்லை. ஒரு வழியாக அதை மீட்டு அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு வருவதற்குள் நேரமாகிவிட்டது என்றார்.

இவர் சொன்னதை ஆட்சித் தலைவர் புன்னகையுடன் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் முதல் வந்து சேர்ந்தவர் வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தார்.

அதன் பின் "உங்களுக்கு எது முக்கியம் ஆளுநரின் பதவி யா? கழுதையின் காலா?" என்று கேட்டார்.

இந்தச் சமயத்தில் ஆட்சிதலைவரின் குழந்தைகள் ஓடி வந்து மடியில் உட்கார்ந்து விளையாட ஆரம்பித்தனர். அவர் அந்தக் குழந்தைகளுக்கு அன்பாக முத்தம் கொடுத்தார்.

இதைப் பார்த்ததும் அந்த முதல் நபர் சொன்னார்.

"ஐயா... எனக்குப் பத்துக் குழந்தைகள். இப்படியெல்லாம் அருகில் வரமாட்டார்கள். என்னைப் பார்த்தலே பயந்து ஒதுங்கிப் போய் விடுவார்கள்"

"அப்படியானால் அவர்களுக்கு முத்தமே கொடுத்தது இல்லையா?"

"இல்லை"

இப்போது அந்த ஆட்சித் தலைவர்

"படைப்புக்கள் மீது கருணை காட்டாதவர் மீது படைப்பாளன் கருணை காட்டமார்ட்டான்" என்றார்.

அதற்கு "அந்த ஐந்து குழந்தைகள் வீட்டுக்குப் போனால் எல்லோரும் என் மேல் வந்து விழுந்து விளையாடுவார்கள். என் உடை கசங்கி இருப்பதற்கு அதுவும் ஒரு காரணம்" என்றார்.

அழகான உடை, இனிமையான பேச்சு, பொலிவான தோற்றம். இதனால் மட்டும் ஒருவர் தலைவராகி விட முடியாது.

கருணை வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் வேண்டும்.

இந்தக் குணங்கள் தாமதமாக வந்து இரண்டாவது நபரிடம் இருப்பதை ஆட்சித் தலைவர் புரிந்து கொண்டார்.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் அந்த ஆட்சித் தலைவர் தமது செயலாளரைக் கூப்பிட்டு "இந்த இரண்டாவது நபருக்குப் பதவி நியமனக் கடிதத்தை அனுப்பி வையுங்கள்" என் றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இந்தியாவின் நேரடி அழுத்தத்தினால் 13 இல் கை வைக்க அரசு பின்னடிப்பு

## தே. தே. இயக்கம் தெரிவிப்பு

இந்தியாவின் நேரடியான அழுத்தமும் ஜப்பானின் மறைமுகமான அழுத்தமுமே இலங்கை அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதை ஒத்தி வைத்துள்ளமைக்கு காரணமாகும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை எம்மீது சுமத்திய இந்தியா இன்று அதனூடாக வட மாகாண சபை தேர்தலை நடத்தும் வியூகத்தில் வெற்றி கண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் இலங்கை விஜயமானது 13ஐ பாதுகாக்கும் இந்தியாவின் இறுதி கட்ட அழுத்தமாகும். அரசாங்கம் சீனாவுடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருப்பதை இந்தியாவும் ஜப்பானும் விரும்பவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் அமெரிக்காவின் உந்துதலின் கீழ் மேற்கொண்ட இரு நாடுகளும் 13 ஐ பாது காப்பதற்கான கடும் அழுத்தங்களை கொடுக்க ஆரம்பித்துள்ளன.

இலங்கைக்கு அதிகளவில் நிதியுதவிகளை ஜப்பான் வழங்குகின்றது. இந்த உதவிகளை மேலும் அதிகரிக்கவும் ஐ.நா.வில் அமெரிக்கா எமது நாட்டுக்குஎதிராக முன் வைத்த பிரேரணையிலிருந்து இலங்கையை பாதுகாப்பதற்கும்ஜப்பான்உறுதியளித்துள் ளது.

அரசாங்கம் இன்று பாரிய நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது. இவ்வாறானதோர் நிலையில் ஜப்பானின் மறைமுகமான அழுத்தத்திற்கு அரசாங்கம் இணங்கி போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மறுபுறம் இந்தியா கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்கின்றது.

இங்கு பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடத்தப்படாமல் இருந்திருக்குமானால் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தும் நிலைமை உருவாகியிருக்காது.

இன்று அரசாங்கம் இத் தேர்தலை நடத்தும் கட்டாயத்தில் இருக்கின்றது. பொலிஸ், காணி அதிகாரங்கள் பறிக்கப்படாது வடக்கில் தேர்தலை நடத்துவது பெரும் ஆபத்தானதாக அமையும் என குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# முறிந்த நிலையில் மின்சார கம்பம்

(பருத்தித்துறை)

கரவெட்டி கண்பொல்லை கிராமத்தில் ஸ்ரீ நாரத பாடசாலையின் முன்பாக காணப்படும் பழைமையான மின் கம் பம் ஒன்று முறிந்து விழக்கூடிய அபாய நிலையில் இன்னுமொரு மின் கம்பத்தின் வடத்தில் தொங்கிய நிலையில் காணப்படுகின்றது.

இம் மின்கம்பத்தின் கீழ்ப்பகுதி முற்றாக உக்கிய நிலையில் சேதமடைந்துள்ளதால் எந்த நேரத்திலும் விழுந்து விடக் கூடிய நிலையில் உள்ளது.

மேற்படி மின்கம்பம் உள்ள இடத்தின் அருகில் பாடசாலையும் குடியிருப்புக்களும் காணப்படுவதால் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-160 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 80 | 120 | 120 |
| தக்காளி | 160 | 160 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 50 | 40 |
| கோவா | 160 | 100 | 120 | 120 |
| கரட் | 160 | 100 | 140 | 160 |
| பூசணி | 60 | 40 | 50 | 50 |
| புடோல் | 80 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 160-200 | 140-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 140 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 | 60 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 100 | 60 | 100 | 120 |
| கறிமிளகாய் | 120 | 120 | 140 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 500 | 280 |
| போஞ்சி | 160 | 160 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 120 |

## இராசி பலன்

25.06.2013
(ஆனி 11, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
துதியை பிற்பகல் 12.51 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 11.32 மணிவரை
இராகுகாலம் 2.55-4.25 மணிவரை
சுபநேரம் 10.25-11.55 மணிவரை

**மேடம்** இனிமையான நாள், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், கனவு பலிதமுண்டு.

**இடபம்** மனக் குழப்பம் அகன்று மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், ஆரோக்கியம் சீராகும்.

**மிதுனம்** வரவு வருவதற்கு முன்னே செலவுகள் காத்திருக்கும், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்** அன்பு நண்பர்கள் ஆதரவு பெருகும், உறவினர் வருகையுண்டு, ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான நாள்,

**சிங்கம்** போட்டிககளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதிகூடும், இனிமையான நாள்.

**கன்னி** உதிரி வருமானங்கள் பெருகும் நாள், அரசு வழியில் சலுகைகள் கிடைக்கலாம், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், உறவினர் உதவியுண்டு.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், வருமானம் திருப்தி தரும், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், சொத்துக்களால் ஆதாயமுண்டு, தேகராக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்** நீண்ட நேரம் பணிபுரிய நேரிடலாம், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், சிந்தனை மிகுதியான நாள், பெரியவர்களின் உதவியுண்டு.

**கும்பம்** சொந்த பந்தங்களுக்காக சில செலவுகளைச் செய்ய முன்வருவீர்கள், தொழிலில் சில மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், வேலைச் சுமை கூடும்.

**மீனம்** எடுத்த காரியங்கள் அனுகூலமாக முடியலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறை பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவாந்துறைப் பகுதியிலுள்ள காணியிலிருந்து வெடிபொருட்கள் சில நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளன. யாழ்.முஸ்லிம் வட்டாரம் ஆஸாத் வீதியிலுள்ள காணியிலிருந்தே இந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளரான பொலிஸ் உத்தியோகத்தர் அங்கு கைவிடப்பட்டிருந்த பாழடைந்த கிணற்றை சுத்தம் செய்துள்ளார். அதன்போதே உரைப்பையில் பொதியிடப்பட்ட நிலையில் இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர் உடனடியாக அண்மையிலுள்ள இராணுவ முகாமிற்கு அறிவித்ததை அடுத்து, இராணுவத்தினரால் இந்த வெடிபொருட்கள் இராணுவ பொறியியல் பிரிவிடம் கையளிக்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். (அ-6)




# 183 குடும்பங்களுக்கு மலசல கூடங்கள்

## செஞ்சிலுவை சங்கம் அமைத்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 183 குடும்பங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதி உதவியுடன் மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளையின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களில் இன்றும் கூட மலசலகூட வசதிகள் அற்ற நிலைமை காணப்படுகின்றது எனவும் தெரிவித்தார். இதில் பருத்தித்துறை பிரதேசத்தில் 90 ஆயிரம் ரூபா பெறுமதியில் தலா 138 மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு மக்கள் இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வளலாய் கிராமத்தில் உள்ள நாற்பத்தைந்து குடும்பங்களுக்கு 45 மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இவைகளை விட பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பதின்னான்கு பாடசாலைகளுக்கு பதின்னான்கு மில்லியன் ரூபா செலவில் மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி திருட்டு

(கரணவாய்)

மந்திகை புலோலி பிரதேச சபையில் கடமையாற்றும் பெண் உத்தியோகத்தரின் துவிச்சக்கரவண்டி பிரதேச சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் தரித்திருந்த போது களவாடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. பிரதேச சபையில் கடமையாற்றும் பெண் உத்தியோகத்தர் பிற்பகல் 2 மணிக்கு வெளியே செல்வதற்காக சைக்கிளை தேடியபோது அது களவாடப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த பெண் உத்தியோகத்தர் பிரதேச சபைத் தவிசாளருக்கு கடிதமொன்றை சமர்ப்பித்ததுடன், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார். (அ-60)

# மாணவனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவன் ஒருவனை கடந்த 5 நாட்களாக காணவில்லை என அவனது தாயாரினால் நேற்றுமுன்தினம் மாலை யாழ். அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது மகன் நண்பர்களுடன் கடந்த 19 ஆம் திகதி கொழும்புக்கு சென்ற நிலையிலேயே காணாமற் போயுள்ளான் என பொலிஸ் முறைப்பாட்டில் குறித்த தாயார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் புத்தூர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுவந்த அப் பகுதியைச் சேர்ந்த கவிதாசன் ரிசாந்தன் (வயது -15) என்ற மாணவனே இவ்வாறு காணாமற் போயுள்ளான்.

மாணவன் காணாமற் போனமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-6)

# பங்களாதேஷ் தூதுவர் யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி பணிகள் தொடர்பில் யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான பங்களாதேஷ் நாட்டின் உயர்ஸ்தானிகர் முஹமட் சுகிர் ரகுமான், வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

இலங்கைக்கான பங்களாதேஷ் நாட்டின் உயர்ஸ்தானிகர் முஹமட் சுகிர் ரகுமான் உள்ளிட்ட அந்நாட்டு பிரதிநிதிகள் குழு நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியை ஆளுநர் அலுவலகத்தில் முற்பகல் 11.30 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

இதன்ளபோதே வடக்கு மாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் குறித்து பங்களாதேஷ் நாட்டின் உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட குழுவினருக்கு ஆளுநர் உள்ளிட்ட வடக்கு மாகாண உயர் அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பிலும் பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் கேட்டறிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ-6)

# சாராயத்தை விற்பனை செய்த பெண்ணுக்கு அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயத்தை விற்பனை செய்த பெண் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி பகுதியில் குறித்த பெண் 180 மில்லி லீற்றர் சாராயத்தை விற்பனை செய்வதாக கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை பொலிஸார் குறித்த பெண்ணைக் கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இவ் வழக்கை விசாரித்த நீதவான் அப் பெண்ணை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். இவ் வழங்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதவான் அப் பெண்ணுக்கு ரூபா 50 ஆயிரத்தை அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டு பெண்ணை விடுதலை செய்தார். (அ-24)




புலம்பெயர்ந்து வாழும் கீரிமலை கருகம்பனை உறவுகளால் கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், மாணவர் ஒருவர் கற்றல் உபகரணத்தை பெற்றுக் கொள்வதையும், நிகழ்வில் கலந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படை அதிகாரிகளை இடம் மாற்றுவதை அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது

(கொழும்பு)

**தமிழகத்தின் வெலிங்டன் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வரும் படை அதிகாரிகள் இருவரையும் வேறோர் பயிற்சி கல்லூரிக்கு இடம் மாற்றுவதை அரசாங்கம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



இலங்கை படை வீரர்களுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கப்படுவதற்கு தமிழக அரசும், அர சியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில் வெலி ங்டனில் பயிற்சி பெற்று வரும் இருபடை அதிகாரிகளையும் புனேயில் உள்ள இரா ணுவ தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரிக்கு இடம் மாற்றும் யோசனையை இந்தியா முன் வைத்துள்ளது.

இது குறித்து இந்தியாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தொடர்பாக கருத்து வெளியிட் டுள்ள பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இன்னொரு பயிற்சிக் கல்லூரிக்கு இலங்கை படை அதிகாரிகளை இடம்மாற்றும் திட்டத்துக்கு இலங்கை அரசாங்கம் இணங் காது என எச்சரித்துள்ளார்.

படை அதிகாரிகள் ஒரு ஆண்டு பயிற்சிநெ றியை வெலிங்டனில் தொடர முடியாது போயின் அவர்களை இலங்கை பெரும்பாலும் திருப்பி அழைக்கும் எனவும் விடுதலைப்புலிகள் ஆத ரவு சக்திகள் இந்திய-இலங்கை உறவுகளை சீர்குலைக்க முனைவதாகவும் அவர் குறிப்பி ட்டுள்ளார்.

மேலும் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு முன் னுரிமை கொடுக்கப்படும் நேரத்தில் வெலி ங்டனில் உள்ள பாதுகாப்பு சேவை அதிகா ரிகள் பயிற்சி கல் லூரி, இலங்கை படை அதிகாரிகளுக்கு கத வடைப்பது என்பது மோசமான பின் னடைவாக இருக்கும் என்றும் அவர் இதன் போது சுட்டிக்காட்டி யுள்ளார். (அ-5)

## கலந்துரையாடல்

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் துஷ் பிர யோகங்களை கட்டுப்படுத்துவது தொடர் பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் வவுனியா அரச அதிபர் எம்.கே. பந்துல ஹரிச்சந்திர தலைமையில நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல திணைக்க ளங்களிலும் கடமை யாற்றும் சிறுவர் நலன் சார் உத்தி யோகத்தர்களை கலந்து கொள்ளு மாறு வவுனியா அரச அதிபர் அறிவித்துள் ளார். (ம-266)

## எறிபந்தாட்டப்போட்டி

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையி லான எறிபந்தாட்டப் போட்டி இன்று செவ் வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மைதான த்தில் நடைபெறவுள்ளது.

இருபாலாருக்குமான மாவட்ட மட்ட போட் டிகளில் வெற்றியீட்டிய அணிகளை பங்கு கொள்ளுமாறு வடமாகாண பிரதிக் கல்விப் பணிப் பாளர் கே.சத்தியபாலன் அறிவித் துள்ளார். (ம-266)

## இலங்கை கொடியுடன் சீன மீன்பிடி கப்பல்கள்; கேரள மீனவ அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு

இலங்கை கொடியுடன் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு சீன மீன்பிடிக் கப்பல்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளமை குறித்து கேரள மாநில கடற்றொழில் அமைப்புக் களும் படகு உரிமையாளர்களும் கடும் எதிர் ப்பை வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையி லான பொதுக் கடற் பிராந்தியத்தில் சீன மீன்பிடிக் கப்பல்கள் மீன்பிடிப்பதால் ஆயிரக் கணக்கான மீனவர்கள் பாதிக்கப்படுவர் என வும் இந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பகுதியில் உள்ள 4 ஆயிரம் சதுர மைல் பரப்பளவான கடற்படுகையின் மீன் வளங்கள் முழுவதையும் 150 அடி நீளமு ள்ள சீனக் கப்பல்கள் அழித்து விடும் என் றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

ஏற்கனவே ஆழ்கடல் மீன்வளங்கள் அழி ந்து போயுள்ள நிலையில் இந்தியாவின் மீன் உற்பத்தி கடுமையாக சரிவடைந்துள்ளது என்றும் சீனக் கப்பல்களின் வருகையால் இது மேலும் பாதிக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-5)


தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-3199)



பாடசாலையில் இருந்து விலகிய மாணவர்கள் மற்றும் தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு!!!

மாதாந்தம் ரூபா 10,000 கொடுப்பனவுடன் கூடிய நான்கு மாதகால இலவச தொழிற் பயிற்சி

கட்டடத் தொழில் (மேசன்), மரவேலைத் தொழில், வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்தும் தொழில்களுக்கான இலவசப் பயிற்சிகளும் எதிர்காலத்திற்கான தொழில் வாய்ப்பும்

வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களது அறிவுறுத்தலுக்கமைய வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் காணப்படும் தொழி லாளர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல் என்ற அடிப்படையில் 1000 இளைஞர்களுக்கு தொழிநுட்பத் திறன் விருத்திப் பயிற்சியூடாக தொழில் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் வடமாகாண தொழிற்துறைத்திணைக்களமும் இணைந்து வேலைவாய்ப்பிற்கான தொழில்நுட்பத் திறன் விருத்திப் பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பயிற்சியில் இணைவதற்கான தகைமைகள்:**

- ✔ ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்
- ✔ வயதெல்லை : 18 - 35 வருடங்கள்
- ✔ கல்வித்தகைமை : 8ஆம் வகுப்புக் கல்வி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
- ✔ தொழில் செய்வதற்கு ஆர்வமும் விருப்பமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்

கற்கைநெறியின் பின்னர்

- ✔ தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் (NVQ -3) வழங்கப்படும்
- ✔ பயிற்சி நெறியின் பின்பு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வாய்ப்பு

**வீட்டுத்திட்ட பயனாளிகளின் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

பயிற்சி நெறி எதிர்வரும் யூலை மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் பயிற்சி பெற விரும்புபவர்கள் தங்களது பூரணப்படுத்தப்பட்ட சுயவிபரத்தினை 05.07.2013 திகதிக்கு முன்பாக பணிப்பாளர், தொழிற்றுறைத்திணைக்களம், வடமாகாணம், கைதடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: பயிற்சி பெற விரும்பும் மாவட்டத்தின் பெயரையும் விரும்பும் பயிற்சி நெறியின் பெயரையும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

தொடர்புகளுக்கு பணிப்பாளர், தொழிற்றுறை திணைக்களம், வட மாகாணம், யாழ்ப்பாணம்

தொலை பேசி :
021 320 2413 - தலைமை அலுவலகம்
021 321 7577 - கிளிநொச்சி
021 321 7576 - முல்லைத்தீவு
024 222 3083 - வவுனியா
021 222 3546 - யாழ்ப்பாணம்
023 222 2418 - மன்னார்

(சி-3758)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1980 இந்து(V)
நட்சத்திரம: உத்தராடம் 3ம்
கி.பா : 92
உயரம்: 5’6”
தகைமை/தொழில்: A/L BSC Livestock. Fisheries விவசாய உத்தியோகத்தர்
தொ.இ:B556

பிறப்பு: 1982 இந்து(V)
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா : 13.75
உயரம்: 5’6”
தகைமை/தொழில்: A/L, CIMAExecutive Assistance
தொ.இ:B564

பிறப்பு: 1984 இந்து(V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி
1கி.பா :19.25
உயரம்: 5’5”
தகைமை/தொழில்- A/L, Collegeஆசிரியர்
தொ.இ:B566

பிறப்பு: 1977 இந்து(V)
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா : 16.75
உயரம்: 5’4”
தகைமை/தொழில்:BScஆசிரியர்
தொ.இ:B569

**மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து(V)
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா : 92 7இல் செவ்
உயரம்: 5’3”
தகைமை/தொழில்: கணணி டிப்ளோமாபகுதி நேர ஆங்கில ஆசிரியர் பதவியை எதிர்பார்த்தல்
தொ.இ:G801

பிறப்பு: 1980 (V)
நட்சத்திரம்: சித்திரை 2
உயரம்: 5’6” 2 இல் செவ்கி.பா : 41தகைமை/தொழில்: BSc,MSc Uk Student visa
தொ.இ:G802

பிறப்பு: 1986 இந்து(V)
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5’4”
கி.பா :27.5
தகைமை/தொழில்:BCom பட்டதாரி பயிலுனர் சைவ போசனம்
தொ.இ:G803

பிறப்பு: 1985 இந்து(V)
நட்சத்திரம்: சதயம் 4
உயரம்: 5’
கி.பா : 36.5 1ல் செவ்
தகைமை/தொழில்:BScகூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ:G805

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சியின் பின் தவிர்க்க வேண்டிய உணவுகள்...



எவ்வளவுதான் உடற்பயிற்சியை சரியாக செய்தாலும், சாப்பிடுவதில் தவறு செய்கிறோம். அதாவது நாம் உணவை சாப்பிடுகிறோம் என்றால் அதற்கென்று நேரம் உள்ளது. அந்த நேரத்தை சரியாக பின்பற்றி சாப்பிடாமல் இருந்தால், அதற்கான விளைவுகள் நேரிடக் கூடும்.

அதிலும் ஏனைய நேரங்களில் சாப்பிடுவதால் ஏற்படும் பிரச்சினைகளை விட உடற்பயிற்சி செய்து முடித்தவுடனேயே பல்வேறு உணவுகளை உண்பது மிகவும் ஆபத்தானது. அது மட்டுமின்றி நிபுணர்கள் பலர், உடற்பயிற்சி செய்த பின்னர் சாப்பிடக்கூடிய உணவுகள் என்றால் அது சேர்வை காபோவைத்ரேற்று, நீர் மற்றும் புரதம் நிறைந்த உணவுகள்தான் என்று கூறுகின்றனர்.

ஏனெனில் உடற்பயிற்சியின் போது உடலில் உள்ள குளுக்கோஸ் எரிபொருளாக மாறுகிறது. எனவே, இந்த நேரம் இரத்தத்தில் உள்ள வெல்ல அளவை அதிகரிக்கும் உணவுகளை உண்ணாமல் இருக்க வேண்டும். இப்போது அவ்வாறு உடற் பயிற்சிக்குப் பின்னர் சாப்பிடக்கூடாத உணவுப் பொருட்கள் எவையென்று பார்ப் போமா!!!

### பழச்சாறு

எவ்வளவுதான் பழங்கள் உடலுக்கு நல்லனவாக இருந்தாலும் உடற்பயிற்சிக்குப் பின்னர் அவற்றைச் சாப்பிடக்கூடாது. இதனால் அதில் உள்ள வெல்லம், இரத்தத்தில் உள்ள வெல்ல அளவை அதிகரித்துவிடும்.

ஒருவேளை ஏதாவது குடிக்க வேண்டுமென்று தோன்றினால் நீர் அல்லது ஐஸ் துண்டுகள் இட்ட மூலிகைச் சாறு அல்லது இளநீரை குடிக்கலாம். இது மிகவும் ஆரோக்கியமானது.

### முட்டை

முட்டை உடற்பயிற்சிக்கு பின்னர்சாப்பிடக்கூடிய உணவுப்பொருள் தான். ஏனெனில் அதில் உள்ள புரதம் மற்றும் கொலாறின் இதயத்திற்கு மிகவும் நல்லது. ஆனால், அவற்றை பொரியல் செய்து சாப்பிடக்கூடாது. அப்போது அதில் கொழுப்புக்கள் அதிகமாக இருக்கும். எனவே, அதனை வேக வைத்து சாப்பிடுவது தான் நல்லது.

Health Care மருத்துவ உலகம் உங்கள் நலம் உங்கள் கைகளில்

### காய்கறிகள்

காய்கறிகளை வேக வைக்காமல் சாப்பிட்டால், அதில் உள்ள சத்துக்கள் உடலில் அப்படியே சேரும். ஆனால், அவற்றை உடற்பயிற்சிக்கு பின்னர் சாப்பிட்டால் உடற்பயிற்சி செய்ததே வீணாகி விடும். தற்போது அதிக இரசாயன மருந்துகள் பயிரிடலில் பயன்படுத்தப்படுவதால் காய்கறிகளை வேக வைக்காதுஉண்டதும்ஆபத்தானதே.

### பாண்

பாண் உட்கொள்வதை அறவே தவிர்க்க வேண்டும். ஏனெனில் உடற்பயிற்சிக்குப் பின் பாண் சாப்பிட் டால் அவை உடலில் செல்லும் போது மிகவும் எளிதில் சீனியாக மாறி விடும். எனவே, அப்போது வேண்டுமெனில் நவதானியங் களாலான உணவுகளை உட்கொள்ளலாம்.

### சீஸ்

நீண்ட தூரம் ஓடிய பின்பு, சீஸ் உணவுகளை அதிகம் உட்கொள்ளல் கூடாது. ஏனெனில் அதில் சாச்சுரேட்டட் கொழுப்புக்கள் மற்றும் உப்பு அதிகமாகவுள்ளது. எனவே, இத்தகைய உணவுகளைச் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது.

### பதப்படுத்தப்பட்ட இறைச்சி

உடற்பயிற்சி செய்யத பின்னர், பதப்படுத்தப்பட்ட இறைச்சியில் செய்யப்பட்ட உணவுகள் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் பதப்படுத்தப்பட்ட இறைச்சியில் கொழுப்புகள் மற்றும் உப்பு அதிகமாக இருக்கும். இதனால் அவை சமிபாட்டு மண்டலத்தின் இயக்கத்தை குறைத்துவிடும்.

இவ்வாறு உடற்பயிற்சியின் மின் உண்ணத் தகுந்த, உண்ணத் தகாத உணவுப் பண்டங்கள் பட்டியிலிடப்படுகின்ற போதும் மருத்துவரின் ஆலோசனைக்கு அமைவாக உடற்பயிற்சியின் பின் எமக்கு ஏற்ற உணவுகளை உள்ளெடுத்தல் சிறப்பானதாகும்.

### மருந்துகளுடன் வாழும் இலங்கையர்கள்: ஆய்வில் தகவல்

இலங்கையில் 90 வீதமான மக்கள் நாளாந்தம் ஏதேனும் ஒரு மருந்தை பயன்படுத்தி வருவதாக சுகாதார அமைச்சு மேற்கொண்ட ஆய்வு ஒன்றில் தெரியவந்துள் ளது.

பெரும்பாலான மக்கள் பல் வேறு வகையான மருந்துகளை எந்தவித மருத்துவ ஆலோசனையும் இன்றி கடைகளில் வாங்கி பயன்படுத்தி வருவதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்துகளை உட்கொள்வது மிகவும் ஆபத்தானது என்றும் பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்றும் சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசாங்க மருத்துவமனைகளில் மாதம் தோறும் 45-50 மில்லியன் ரூபா பெறுமதியான பரசிற்றமோல் வில்லைகள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# வருடம் ஒன்றுக்கு 24 இலட்சம் ரின்மீன்கள் தயாரிக்கப்படுகின்றன

(கொழும்பு)

வருடமொன்றுக்கு 24 இலட்சம் மீன்ரின்கள் தயாரிக்கப்படுவதாகவும் இதற்கென தினமும் 6 ஆயிரத்து 250 கிலோ கிராம் மீன்கள் தேவைப்படுவதாகவும் இவை சீனாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுவதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

காலியில் அமைக்கப்பட்டுள்ள ரின்மீன் தொழிற்சாலை தொடர்பாக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தகவலை வெளியிட்டுள்ளார்.

இதன்போதே வாய்மொழி மூலமாக கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன குறித்த ரின்மீன் தொழிற்சாலை 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. முதல் மீன்பிடித் துறை அமைச்சும் ஹெப்பி குக் நிறுவனமும் இணைக்குழு நிறுவனமாகவே இயங்குகின்றன.

வருடமொன்றுக்கு 24 இலட்சம் ரின்மீன்கள் தயாரிக்கப்படுகின்றன. கும்பளா மீன்களும் மெக்கரல் மீன்களுமே ரின்களில் அடைக்கப்படுகின்றன. தினமும் 6 ஆயிரத்து 250 கிலோ கிராம் மீன் தேவைப்படுகின்றது. இத் தொழிற்சாலையின் தேவைக்காக மீன்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு மாதாந்தம் 150 மெற்றிக்தொன் மீன்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டியுள்ளது என தெரிவித்திருந்தார்.

இதன்போது இடைமறித்த தயாசிறி ஜயசேகர எம்.பி., எமக்கு அண்மையிலுள்ள நாடுகளில் மீன்களை இறக்குமதி செய்யாது ஏன் சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரட்ண,

ரின்களில்அனைத்து மீன் வகைகளையும் அடைக்க முடியாது. மெக்கரல் என்ற வகை மீனையே அடைக்க முடியும்.

இவ்வகை மீன்கள்எமது அண்டை நாடுகளில் கிடைப்பதில்லை. சீனா மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளிலேயே இவ்வகையான மீன்களை பெற முடியும் என பதிலளித்தார். (அ-5)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடை பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் சு. தியா கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமர்தலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (அ-5)





திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன் பள்ளி குழந்தைகள் காப்பகத்தின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. வே.பேரின்பநாதன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் சிறார்கள் மென்கயிறு இழுத்தல் போட்டியில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இந்தியா கவலைப்பட்டு பயனில்லை

## அழுத்தம் கொடுக்க வேண்டும்– த நியூ இந்தியா எக்ஸ்பிரஸ் வலியுறுத்து

(கொழும்பு)

**13ஆவது திருத்தச் சட்டமூலத்தை நீர்த்துப்போகச் செய்ய மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் கவலையை மட்டும் வெளிப்படுத்தாது இச்சட்டமூலத்தை இதய சுத்தியுடன் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என த நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.**



மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குகின்ற 13ஆவது திருத்தச்சட்ட மூலத்தை நீர்த்துப் போகச் செய்ய இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் கடந்த வாரம் புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தனது கவலையை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை நீக்குமாறு இலங்கையின் பாதுகாப்புச் செயலாளரும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

வடமாகாண சபைத்தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் அரசியலமைப்பில் இருந்து 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நீக்க வேண்டும் என இக்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. இவ்வாறு நடைபெற்றால் தெரிவு செய்யப்படும் மாகாண சபை நிர்வாகம் சுதந்திரமாகச் செயற்படமுடியாது. இலங்கை அரசாங்கத்தின் கைப்பொம்மையாகவே அது இருக்கும்.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தது.

13ஆவது திருத்தச்சட்டமூலம் இரத்துச் செய்யப்பட்டால் இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் வழங்கிய வாக்குறுதியை மீறுவதாக அமையும். தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விடுவது என்பது இலங்கை அரசாங்கத்துக்கு ஒன்றும் புதிதல்ல.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் திருப்தி தரக்கூடிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பில் தமிழ்மக்கள் தொடர்ந்தும் அதிருப்தி அடை வார்களாயின் ஆபத்தான விளைவுகள் ஏற்ப டுவதற்கான சாத்தியங்கள் உருவாகும்.

இந்நிலையில் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை இரத்துச் செய்வது தொடர்பில் தமது கவலையை மட்டும் வெளிப்படுத்தாது இச் சட்டமூலத்தை இதயசுத்தியுடன் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என இந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வடக்கு காணி சுவீகரிப்புக்கு எதிராக செயற்பட சட்டத்தரணிகள் சங்கம் தயார்

(கொழும்பு)

வடக்கில் பொதுமக்களின் காணிகள் அரசினால் சுவீகரிக்கப்படுவதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

காணி சுவீகரிப்பு தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இவ்விடயம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தேவைகளுக்காக வடக்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதன் காரணமாக அம்மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இடம்பெறவுள்ள நிலையில் இத் தேர்தல் முடிபுகள் தற்போதுள்ள அரசாங்கத்திற்கு சாதகமானதாகவே அமையும் எனவும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்னதாக காணி சுவீகரிப்பு தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இதுவரையில் வடக்கில் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ள பிரதேசங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அரசு குறிப்பிட்டுள்ள நிலையில், வடக்கில் இராணுவ தேவைகளுக்காக மக்களின் காணிகள் தற்போதும் சுவீகரிக்கப்பட்டு வருவதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த காலங்களில் ஆர்ப்பாட்டம் மற்றும் கவனயீர்ப்பு போராட்டங்களை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ–5)

# நாட்டை விட்டு வெளியேறியோரை வரவேற்க அரசாங்கம் தயார்

(கொழும்பு)

இலங்கையில் நடந்த போர் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த வடக்கு மாகாணத்தின் பொருளாதார நிலைமை ஸ்திரமடைந்துள்ளதால் மீண்டும் அவர்களை இலங்கை திரும்புமாறு இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் அகதிகளாக வாழும் தமிழர்களிடம் வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மாத்திரமல்லாது நாட்டின் அனைத்து பிரதேசங்களும் தற்போது துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாகவும் இதனால் வெளிநாடுகளில் தொடர்ந்தும் மக்கள் அகதிகளாக இருக்கத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள அமைச்சர் அங்கு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே இதனை தெரிவித்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி வேகம் 22 வீதமாக உள்ளதாகவும் இதன்போது அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் போர் காலத்தில் நாட்டை விட்டு வெளியேறியவர்களை வரவேற்க இலங்கை அரசாங்கம் தயாராகவுள்ளது.

நாடு திரும்புபவர்கள் தொழில்களில் ஈடுபடவும் சந்தர்ப்பம் வழங்கப்படும். போர் நடைபெற்ற காலத்தில் பல இலட்சம் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனவும் அமை ச்சர் குறிப்பிட்டார். (அ–5)

# கொழும்பின் 12 பிரதேசங்களில் டெங்குநோய் தாக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் 12 நகர பிரதேசங்கள் டெங்குநோய் பரவும் கடும் ஆபத்துக்குரிய இடங்களாக இருப்பதாக நகர பிரதம வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்துள்ளார்.

தெமட்டகொட, வனாத்தமுள்ள, பொறளை, கொம்பனித்தெரு, மட்டக்குளி, முகத்துவாரம், மகவத்தை, கிருலப்பனை, பாமன்கடை, வெள்ளவத்தை, நாரஹேன்பிட்டி, கறுவாக்காடு ஆகிய பகுதிகளே இவ்வாறு அடையாளங் காணப்பட்டுள்ளன.

புதிதாக 183 டெங்குநோயாளர்கள் கண்டு பிடிக்கப்படும் நிலையில் கொழும்பு நகரில் ஆயிரத்து 425 நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஏழுபேர் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் பொறளை ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினமும் ஒரு குழந்தை டெங்குநோயினால் உயிரிழந்துள்ளது.

கொழும்பு நகரில் 20 ஆயிரத்து 500 அரச, தனியார் நிறுவனங்களும் வீடுகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் ஆயிரத்து 170 பேருக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 550 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார். (அ–5)

# வர்த்தக பேரவை மாநாட்டில் கலந்துகொள்ள வாரீர்!

## ஆஸியை அழைக்கிறார் பீரிஸ்



பொதுநலவாய உச்சி மாநாட்டையொட்டி கொழும்பில் நடைபெறவிருக்கும் வர்த்தகப் பேரவை அவுஸ்திரேலிய தொழில் முயற்சியாளர்களுக்கு இலங்கையுடன் இணைந்து செயலாற்ற சிறந்த சந்தர்ப்பமாக அமையுமென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் பீரிஸ் அங்கு மெல்போர்னில் நடைபெற்ற இலங்கை – அவுஸ்திரேலிய வர்த்தகப் பேரவைக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர் பீரிஸ் இலங்கையில் தனியார் மற்றும் அரச துறையினரால் தயாரிக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களடங்கிய 69 பக்க கையேடுகளையும் அங்கிருப்பவர்களுக்கு கிடைக்கச் செய்ததுடன் இதனூடாக இலங்கையில் மேற்கொள்ளக்கூடிய முதலீடுகள் குறித்து எவ்வித சந்தேகங்களுமின்றி அறிந்து கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள வர்த்தகப் பேரவையில் கலந்துகொள்ளுமாறு இலங்கை விடுத்த வேண்டுகோளை அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டிருப்பதையும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியதோடு இலங்கையில் முன்னெடுக்கப்படக்கூடிய முதலீடுகள் குறித்து விரிவாக விளக்கமும் அளித்துள்ளார். இதன்போது முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் தலைவர் வைத்திய கலாநிதி லக்ஸ்மன் ஜயவீர மற்றும் இலங்கையில் நீண்டகாலமாக வர்த்தக நடவடிக்கைகளை வைத்திருக்கும் அவுஸ்திரேலிய பிரதிநிதிகள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். (அ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு டில்லியுடன் பேசினாலும் இந்தியாவுடனான உறவில் மாற்றமில்லை

## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் தினேஸ்

(கொழும்பு)

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இந்தியாவின் மத்திய அரசாங்கத்துடன் எத்தகைய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட போதிலும், இலங்கை-இந்திய நட்புறவில் எத்தகைய பாதிப்பும் ஏற்படாது எனவும் இருதரப்பு உறவை தொடர்ந்தும் பேணுவதில் அரசு உறுதியாகவுள்ளதெனவும் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இந்தியப் பயணம் குறித்து கருத்து வெளியிடும்போதே அமைச்சர் தினேஸ் குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை-இந்திய அரசாங்கங்களுக்கிடையே பலகாரணங்களை அடிப்படையாகக் கொண்டு நட்புறவு ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தக் கூடிய சூழல் தொடர்ந்தும் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இந்திய வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார செயலாளர் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியிருப்பதாக எமக்கு அறியக்கிடைத்துள்ளது.

இப் பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக இந்தியா சென்றிருப்பது முதற் தடவையல்ல. இதற்கு முன்னரும் இவர்கள் பல தடவைகள் இந்தியாவுக்குச் சென்று சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற பெயரில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினரின் பிரதிநிதிகளாகவே இவர்கள் இந்தியா சென்று வருகின்றனர்.

மோதல்களின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களும் தலைவிகளும் உயிரிழந்தமை தான் இவர்களுக்கு இன்னமும் பிரச்சினையாகவுள்ளதே தவிர, வடக்கின் மக்களுக்கென பயங்கரவாதிகளிடமிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை நிலையாக தக்க வைத்துக் கொள்வது பற்றி இவர்கள் சிறிதும் அக்கறை செலுத்துவதாக தெரியவில்லை.

வடக்கு மக்கள் முன்னொரு போதும் இல்லாத வகையில் சுதந்திரமாக வாழ்கின்றனர். இதனை மீண்டும் போராட்டமாக்குவதற்கே இந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி.க்கள் விரும்புகின்றனர் போல் தெரிகிறது.

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்ததன் மூலம் நாட்டில் தக்கவைத்துள்ள ஜனநாயகத்தை சீர்குலைக்கும் வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தையின் மூலமே சிறந்த தீர்வினை எட்ட முடியும்.

ஆனால் கூட்டமைப்பு எம்.பிக்களே சம்பந்தப்பட்டவர்களுடன் உள்நாட்டில் பேச்சுவார்த்தை நடத்துவதை விடுத்து சர்வதேச நாடுகளுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்கின்றனர். இது நாட்டின் ஜனநாயகத்தை சீர்குலைக்கும் செயலாகும்.

சர்வதேச ரீதியான சதிகாரர்கள் மீண்டும் நாட்டிற்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் சூழலை தோற்றுவிக்கத் தேவையான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலேயே கூட்டமைப்பினர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனரென குறிப்பிட்டுள்ளார். (அ-5)



சங்கானையில் அமைந்திருக்கும் (Butterfly International School) பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் எஸ்.நோபேட் உதயகுமார் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் வினோத உடை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# பல்வேறு வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார் டக்ளஸ்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கான விஜயத்தை மேற்கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவுக்கு கடந்த 21 ஆம் திகதி விஜயம் மேற்கொண்ட அமைச்சர் **வடக்கின் வசந்தம் நிகழ்ச்சி திட்டம்** மற்றும் நெடுந்தீவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 100 மில்லியன் ரூபா திட்டத்தின் ஊடான விசேட உட்கட்டமைப்பு ஆகிய திட்டங்களை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக நெடுந்தீவு பிரதான வீதியிலுள்ள வெட்டகாடுப் பகுதியில் பொதுவிளையாட்டு மைதானத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்ததுடன், மைதானத்தை சூழவும் மரக்கன்றுகளை நாட்டுமாறும் தற்போது அங்குள்ள மரங்களைப் பாதுகாக்குமாறும் துறைசார்ந்தோரிடம் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும் திருலிங்கபுரம் குடியிருப்பு திட்டத்தில் திருஇருதய நாதர் சனசமூக நிலையத்துக்கான அடிக்கல்லை அமைச்சர் நாட்டி வைத்ததுடன், நெடுந்தீவு முருகன் கோவிலடிப் பகுதியில் பாலமுருகன் முன்பள்ளி கட்டடத்துக்கான அடிக்கல்லையும் நாட்டிவைத்தார்.

தொடர்ந்து சாராப்பிட்டிக்கு சென்று அமைச்சர் டக்ளஸ், குடிநீர் கிணறுகளை பார்வையிட்டதுடன், அவற்றின் சுத்தம் மற்றும் பராமரிப்பு தொடர்பில் கவனம் செலுத்தி, அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் துறைசார்ந்தோருக்கு பணிப்புரை வழங்கினார். அதன்படி குடிநீர் கிணறுகளை ஆழப் படுத்தி அவற்றை பாதுகாப்பது, குறித்த வளாகத்தில் மரக்கன்றுகளை நாட்டுவது, கால்நடைகளுக்கான குடிநீர் தொட்டிகளை பராமரித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தியுள்ளார்.

நெடுந்தீவு மத்தி பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கடற்றொழிலாளர் இளைப்பாற்று மண்டபத்தை திறந்து வைத்து கடற்றொழிலாளர்களிடம் கையளித்ததை தொடர்ந்து, நெடுந்தீவு பெருக்கடிப் பகுதியில் மீன்சந்தை உட்பட கடைத்தொகுதிகளைக்கொண்ட பொதுச் சந்தைக்கான அடிக்கல்லையும் நாட்டி வைத்தார்.

இதையடுத்து நெடுந்தீவின் குயின்டஸ் வீதிக் கான புனரமைப்புப் பணிகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துடன் நெடுந்தீவில் புனரமைக் கப்பட்ட பற்றிமா கோவில் மேற்கு வீதியை மக்கள் பாவனைக்காக திறந்தும் வைத்தார். (அ-5)

# வடக்கு தேர்தலில் போட்டியிடேன்

(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் எண்ணமில்லை என தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் நிதிப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த தொலைபேசி செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாணசபையின் முதல்வராக யார் தெரிவாவார் என்பது பற்றி திடமாக குறிப்பிடமுடியாது.

வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் உத்தேசம் எனக்குக் கிடையாது.

மேலும் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமியருக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கவே திட்டமிட்டுள்ளேன் என குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# வெளிநாட்டவர்களுக்கு காணி விற்பனை செய்ய தடை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட, அரச மற்றும் தனியார் காணிகளை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதைத்தடை செய்வதான யோசனை யொன்றுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, பரிசு, விற்பனை, நன்கொடை உள்ளிட்ட எவ்விதத்திலேனும் வெளிநாட்டவர்களுக்கு காணி வழங்கமுடியாது. இதற்கு இனி சட்டத்தில் இடமில்லை. எதிர்வரும் காலங்களில் வெளிநாட்டவர்கள், குத்தகைக்கு மாத்திரமே காணிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

காணி உரிமையாளர்கள், தங்களது காணிகளைக் குத்தகைக்கு விடுவார்களாயின் குத்தகைக்கு விடும் காலம் அதிகபட்சம் 99 ஆண்டுகள் மாத்திரமேயாகும் எனவும் ஜனாதிபதியின் அந்த யோசனையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# அஞ்சலிக் கூட்டமும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் நடத்தும் காந்திய சிந்தனையாளர் மு.மாரியப்பனின் அஞ்சலிக் கூட்டமும் காந்தியசிந்தனை கற்கை நெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அஞ்சலி நிகழ்வில் ஆசியுரையை வேதாந்த மட குரு பீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்தியாசாகர சுவாமிகள் வழங்கவுள்ளார்.

**மாரியப்பன்** என்ற சிறப்புரையை அகில இலங்கை காந்தி சேவா சங்க சிரேஷ்ட தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை வழங்க, அஞ்சலியுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் ந.சிவகரன், அகில இலங்கை காந்தி சேவா சங்க முன்னாள் தலைவர் ஆ.வடிவேலு ஆகியோர் வழங்கவுள்ளதோடு, **மாரியப்பனுடனான அனுபவங்கள்** என்றதொனிப்பொருளில் திருமதி சரஸ்வதி தம்பிப் பிள்ளை உரை ஒன்றையும் வழங்கவுள்ளார்.

அஞ்சலி நிகழ்வில் வெளியிடப்படும் காந்தீயம் சிறப்பிதழின் அறிமுகவுரையை காந்தீய ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி வழங்கவுள்ளார். சிறப்பிதழை சோ.க. தம்பிப் பிள்ளை வெளியிட்டு வைக்க ஸ்ரீமத் வேதவித்தியாசாகர சுவாமிகள் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து இடம்பெறும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் மூதறிஞர் ஆ.சபாரத்தினம், காந்தி சேவாசங்கத்தின் சிரேஷ்ட தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் ந.சிவகரன், ஓய்வுபெற்ற அதிபர் க.செல்வக்குமாரன், ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் அ.கிருபானந்த மனுநீதி, யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியலாய ஆசிரியை திருமதி பிரபாலினிதனம் ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் அறிமுகவுரையை காந்தீய சிந்தனை கற்கை நெறி இணைப்பாளர் க.செல்வக்குமாரன் வழங்க **அகிம்சையும் சமூகமும்** என்னும் சிறப்புரையை கற்கை நெறி மாணவி து.தசோனியா வழங்கவுள்ளார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்டவர் மீண்ட அற்புதம்



ஆன்மீகம் 42

அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

...சித்தரை நாடிவரும் கர்ப்பிணிகளுக்கு சாமி தம்முடைய சஞ்சீவி மூலிகை தைலம் கொடுப்பார். இதை பெண்கள் பிரசவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு உபயோகிக்க வேண்டும் என்று கூறி, அதை அடிவயிறு, பாதம், தொப்புள், மூட்டுகள், ஆசனப்பகுதிகளில் தடவிக் கொள்ள சுகப்பிரசவத்தை அடைவார்கள். உடலும் ஊதி பெருக்காது என்பார். பிராமண தம்பதியைப் புரிந்து கொண்ட சித்தர், அவர்களை ஆச்சிரமத்திலே தங்கச் சொன்னார். அவர்களும் அங்கே தங்கசாமி சிகிச்சை செய்தார்கள். அந்த பிராமணர் உடல் உபாதையின் உச்சக் கட்டத்தில் துடித்துக் கொண்டிருந்தார். இது கண்டு வேதனைப்பட்ட நான் சாமிகளிடம் இது பற்றி முறையிட்டேன்.

தாங்கள் நினைத்தால் இவரைக் காப்பாற்ற முடியாதா என்று கெஞ்சினேன். அதற்கு அவர் ராஜா! ஆபரேசன் ஆன உடலை இயற்கை முறையில் செய்யும சித்த வைத்தியத்தாலும் காப்பாற்ற முடியாது. இயற்கையான கத்தி படாத உடல் நம் மருந்துக்கு கட்டுப்படும் நம்மீது நம்பிக்கையில்லாமல நவீன வைத்தியத்திற்காக சொத்தை விற்று செலவழித்தும் பலன் இல்லாமல் போய்விட்டது. டாக்டர்கள் கிளினிக்குகளில் வைத்தியன் வைத்தியம் பார்க்கிறான். கடவுள் தான் நோயைக் குணப்படுத்துகிறார் என்று போர்டு வைத்திருப்பதாகவும் ஒரு நண்பர் என்னிடம் சொன்னார். நானும் அதுதானே உண்மை! மனிதனிடம் என்ன இருக்கு. படித்தவர்கள் பகவானிடம் நம்பிக்கை வைத்து இருக்கிறார்களே! இது போதும் என்று பாராட்டினேன்.



சித்தர் ஆச்சிரம குருபூஜையில் அன்னை சித்தர்

இவருக்கும் டாக்டர்கள் சிகிச்சை செய்திருக்கிறார்கள். முடிவை கடவுளிடம் கைகாட்டி விட்டார்கள்.

நன்றாய் இருந்த உடம்பை கூறு போட்டு அனுப்பி விட்டார்கள். இனி அவர் வாழும் காலம் கடவுள் கையில்தான்! தற்போதைக்கு அடைபட்டுக் கிடக்கும் மல ஜலத்தை வேண்டுமானால வெளியே தள்ளி விடலாம். ஆனால், அவரைக் காப்பாற்ற முடியாது. இருக்கும் வரை இருந்துவிட்டு போகட்டும் என்ற வருத்தத்துடன் கூறிவிட்டு எழுந்து சென்றுவிட்டார். சில நாட்கள் கடந்தன. சாமி சொன்னவாறு மலஜல உபாதைகளை நீக்கிட அந்த பிராமணர் வலி அவஸ்தையிலிருந்து விடுபட்டார். அய்யா மனைவி வெகு சுறு சுறுப்பாய் காலையில் குளித்து ஆச்சிரமத்தில் சாணம் மெழுகுவதும் கோலங்கள் போட்டு பூஜைகளுக்கு வேண்டிய சாமான்களைக் கழுவிக் கொடுப்பதும் தன் கணவன் எப்படியும் பிழைத்துக்கொள்வான் என்ற திட நம்பிக்கையுடன் இருந்தார்.

இவரது சிந்தனை காலம் கடந்தது. ஆயினும் வந்தவர்களை திருப்பி அனுப்ப முடியாத காரணத்தார் ஆதரவற்றவர்களுக்கு பகவானே துணை என்பது போல் அய்யரின் உடல் நிலையை உணர்ந்து மேலோட்டமாக மருந்துகொடுத்தார். துன்பப்படுத்திய மனித உயிர் இருக்கும் காலம் வரைதான் இருக்கும் என்பது போல் சித்தர் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார் பூர்வீகத்தில் அய்யர் புண்ணியம் செய்த காரணத்தால் தான் சித்தர் ஆச்சிரமத்தின் உறவு கிடைத்தது பாக்கியம் என்பேன்.

ஒருநாள் பூஜை நேரம். பூஜை நடந்து கொண்டிருந்தது. அய்யரது மனைவியின் அலறல் கேட்டு விரைந்து பாட்டிலை எடுத்துக்கொண்டு சித்தர் பெருமான் அங்கு வந்தார்.

தொடரும்

# போர் தவிர்ப்பு வலயம்

## 93 நிமிடநேர காணொலி

கலும் மக்ரேயுடன் சிலோன் ருடே ஊடகத்திற்காக சிலோசனா ராமய்யா மோகன் மேற்கொண்ட நேர்காணலின் விபரம் வருமாறு:-

கேள்வி:- இலங்கைத் தீவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்குடன் சனல்4 தொலைக்காட்சி சேவையானது திட்டமிட்ட ரீதியில் தனக்கு எதிரான காணொலியை வெளியிடுவதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியிருந்தது. இந்நிலையில் தங்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிர்த்து நீங்கள் ஏன் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை?

பதில்:- நான் இங்கு ஒரு விடயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் இலங்கைக்கு எதிராக ஒன்று திரளவில்லை. நான் எனது காணொலியின்ஊடாக போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சாட்சியங்களை முன்வைத்து அவற்றை விசாரணை செய்ய வேண்டும் எனக்கோரியுள்ளேன்.

ஈராக்கில் பிரித்தானியா மற்றும் அமெரிக்கப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்கின்ற ஆவணப்படங்களை வெளியிட்டது போன்ற தற்போது நான் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட போர் மீறல்கள் விசாரணை செய்கின்ற ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளேன். இதில் எவ்வித வேறுபாடுகளும் காணப்படவில்லை. இது எனது தொழில் பிரித்தானியா அரசாங்கத்தால் அல்லது இலங்கை அரசாங்கத்தால் அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளால் என எந்தத் தரப்பினரால் போர் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் நான் அவற்றை விசாரணை செய்வேன்.

ஆனால், பொய்யான சில கூற்றுக்களுக்கு நான் பதிலளிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதை எப்போதும் எதிர்க்கிறேன். எடுத்துக்காட்டாக இலங்கை அரசாங்கப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களை ஆவணப்படுத்தி நான் ஆவணப்படங்களை வெளியிடுவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் எனக்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணம் தந்ததாக மீண்டும் மீண்டும் குற்றம் சாட்டப்படுகிறது.

எனது காணொலிகள் எவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன என்பதை நீங்கள் நினைவுபடுத்தமுடியும். தமிழீழ விடுதலைப்புலிகளும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக நான் குற்றம் சுமத்தியுள்ளேன். அதாவது பயங்கரவாத போர்த் தந்திரோபாயங்களை இவர்கள் பயன்படுத்தியதாகவும் சிறுவர்களைப் படையில் இணைத்தமை மற்றும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டமை போன்றவற்றை விடுதலைப்புலிகள் தரப்பால் மேற்கொள்ளப்பட்ட மீறல்களாக சுட்டிக்காட்டியுள்ளேன். என்னால் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள போர் தவிர்ப்பு வலயம் என்கின்ற காணொலியில் பொது மக்கள் வாழ்ந்த இடங்களில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பயங்கரமான தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான பதிவுகளை இணைத்துள்ளேன். அத்துடன் போர்த் தவிர்ப்பு வலயங்களுக்கு தப்பிச்செல்ல முயன்ற தமிழ்ப் பொது மக்கள் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிச் சூடுகளை மேற்கொண்டமை தொடர்பாக நான் தற்போது தயாரித்துள்ள ஆவணத்தில் குற்றம் சுமத்தியுள்ளேன்.

இந்நிலையில் இவ்வாறான விடயங்களை நான் ஆவணப்படுத்துவதற்கு விடுதலைப்புலிகள் எனக்கு பணம் தந்தார்கள் என இன்னமும் இலங்கை அரசாங்கம் உண்மையில் நம்புகிறதா? இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை என்பது தெளிவாகும். இதனாலேயே நான் இவ்வாறான போலியான குற்றச்சாட்டுக்களைத் தட்டிக்கழித்துள்ளேன்.



கேள்வி:- இலங்கை அரசாங்கமானது சனல்4 தொலைக்காட்சி சேவையிடம் தன் மீதான குற்றங்களை நிரூபிக்கும் காணொலிகளின் மூலப் பதிவுகளைத் தருமாறு கோரியுள்ளது. இதனை நீங்கள் நிறைவேற்ற விரும்புகிறீர்களா?

பதில்:- போரின் இறுதிக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை சான்றுபடுத்தும் காணொலிப் பதிவுகளை இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படும் இலங்கைப் பாதுகாப்பு படைவீரர்கள் சிலரே எடுத்துள்ளனர் இந்நிலையில் இந்த ஆவணங்களை இலங்கை அரசாங்கம் ஏன் தனது வீரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாது? எல்லாக் காணொலிகளிலும் இலங்கைப் படை வீரர்கள் மீறல் சம்பவங்களை தமது தொலைபேசிகளில் பதிவேற்றுவதைக் காணலாம். கேணல் ரமேஸ் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் அடையாளங் காணக்கூடிய ஒரு இராணுவ வீரர் ஒருவரால் கேணல் ரமேஸ் படுகொலை செய்யப்பட்டதைக் காணலாம். இதேபோன்று நிர்வாணமாக்கப்பட்ட விடுதலைப்புலி வீரர்கள் பின்னர் படுகொலை செய்யப்படும் காட்சியை பதிவாக்கியபோது அதில் இராணுவ வீரர்கள் நடமாடுவதையும் அவர்கள் இவற்றை தமது தொலைபேசிகளில் பதிவாக்குவதையும் காணமுடியும். இக்காணொலிப் பதிவுகளில் சில இராணுவ வீரர்கள் கதைப்பதைக் கேட்க முடிவதுடன் அவர்களில் சிலரை அடையாளம் காணமுடிகிறது.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சனீஸ்வரனின் விஜயம்



ஒரு ஏழை விவசாயிக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர்களை விவசாயி மிகவும் பிரியத்துடன் வளர்த்தான். அவர்களும் வளர்ந்து பெரியவர்களானதும் வயல் வேலைகள் அனைத்திலும் தந்தைக்கு உதவியாக இருந்தனர். உரிய காலத்தில் தகுந்த பெண்களைத் தேர்ந்தெடுத்து தன் பிள்ளைகளுக்கு விவசாயி திருமணம் செய்துவைத்தான். அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்தனர். மருமகள்களுடைய ஒப்பந்தப்படி ஒவ்வொரு நாளும் ஒரு மருமகள் வீட்டிலேயே தங்கி அனைவருக்கும் உணவு தயாரிக்க மற்ற மருமகள் இரு

**அம்புலிமாமா கதைகள்**

வரும் வயல்வெளிக்கு சென்று வந்தனர்.

ஒரு ச்னிக்கிழமை மூன்றாவது மருமகளின் சமைக்கும் முறையாக அமைந்தது. அவள் சமைக்க ஆரம்பித்த போது, யாரோ அழைக்கும் குரல் கேட்டு, அவள் வெளியே வந்தாள். கிழிந்த உடைகளில் ஒரு பிச்சைக்காரன் வாசலில் நின்று கொண்டிருந்தான். அவன் அவளை நோக்கி, "தாயே எனக்கு உடல் முழுதும் அரிக்கிறது எனக்குத் தேய்த்துக் கொள்ள எண்ணெய் கொடுப்பாயா?'" என்று கேட்டான்.

அவள் உடனே உள்ளே சென்று எண்ணெய் பாத்திரம் எடுத்து வந்து அவனது கைகளில் நல்லெண்ணெய் வார்த்தாள். அதை அவன் உடல் முழுதும் பூசிக் கொண்டான். அவள் அவனைப் பார்த்து "நீ அருகிலுள்ள குளத்தில் குளித்து விட்டு வா. உனக்கு சாப்பாடு போடுகிறேன்" என்று அன்புடன் சொன்னாள்.

பிச்சைக்காரீன் குளத்தில் குளித்து விட்டு, வரும் வழியில் இலைகளை பறித்து அவற்றை தைத்து உண்பதற்கான இலையாக மாற்றிக் கொண்டு வந்தான். சிறிய மருமகள் அன்புடன் பரிமாற, பிச்சைக்காரன் மகிழ்ச்சியுடன் உண்டு விட்டு "நன்றி தாயே! இவ்வளவு சுவையான உணவு நான் சாப்பிட்டதே இல்லை. என்று அவளைப் புகழ்ந்துவிட்டு, தான் சாப்பிட்ட இலையை அவர்கள் வீட்டுக்கூரையிலேயே செருகி விட்டுச் சென்றுவிட்டான். இதை அந்தப் பெண் பார்த்தாள். ஆனால், விரைவிலேயே அதை மறந்துவிட்டாள்.

அன்றிரவு குடும்பம் முழுவதும் சாப்பிட அமர்ந்தவுடன், சிறிய மருமகள் பரிமாற அன்று உணவுப் பண்டங்கள் மிகவும் சுவையாய் இருந்ததைக் கண்டு அனைவரும் அவளைப் புகழ்ந்தனர். அடுத்த சனிக்கிழமை, இரண்டாவது மருமகளின் முறை வந்தது. அவள் சமைக்கத் தொடங்கியதும் அதே பிச்சைக்காரன் அன்றும் வந்தான். "தாயே, உடல் எங்கும் அரிக்கிறது. கொஞ்சம் எண்ணெய் தாருங்களேன்" என்று அந்தப் பிச்சைக்காரன் வேண்டியதும், இரண்டாம் மருமகளுக்கு கோபம் வந்தது. பிச்சைக்காரனுக்கு எண்ணெய் வேண்டுமா? சபாஷ்! உனக்குத் தருவதற்காக நாங்கள் எண்ணெய் வைத்துக் கொள்ள வில்லை போ வெளியே" என்று விரட்டினாள். "சரி எண்ணெய் இல்லாவிடில் பரவாயில்லை. சாப்பிட ஏதாவது தருகிறீர்களா? என்று பிச்சைக்காரன் கேட்க நீ இன்னுமா போகவில்லை?" என்று அழுக்கு நீரை ஜன்னல் மூலம் அவன் மீது வீசினாள்.

"உனக்கு இன்று சாப்பிட ஒன்று மில்லாமல் போகட்டும்." என்று சாபமிட்டு விட்டுப் பிச்சைக்காரன் சென்றுவிட்டான். அன்றிரவு அனைவரும் சாப்பிட அமர்ந்தவுடன் மருமகள் பரிமாறவேண்டி பாத்திரங்களைத் திறந்தால் அவை அனைத்தும் காலியாக இருந்தன. ஏதோ தவறு நடந்துவிட்டது என்று எண்ணி விவசாயி மீண்டும் சமையல் செய்யக் கூறினான். ஆனால், வீட்டில் அரிசி, தானியங்கள் உள்ள பாத்திரங்கள் அனைத்தும் காலியாய்த் தென்பட்டன. விவசாயியின் மகன்கள் கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கி வர, மீண்டும் சமையல் செய்யும்படியாக ஆயிற்று. அதற்கடுத்த சனிக்கிழமையும் சொல்லி வைத்தாற்போல், அதே பிச்சைக்காரன் வந்தான். "தாயே , கொஞ்சம் எண்ணெய் தருவீர்களா?" என்று கேட்ட பிச்சைக்காரனைக் கண்டதும் மூத்தவளுக்கு எரிச்சல் உண்டாயிற்று.

இவன்தான் சென்ற சனிக்கிழமை தன் வீட்டிலிருந்த சமையல் பதார்த்தங்களைத் திருடிச் சென்றவனோ என்ற சந்தேகமும் உண்டாயிற்று. உடனே அவனை சரமாரியாகத் திட்டி, திருட்டுப்பயலே, இங்கிருந்து போ என்று அவனை விரட்டினாள். அந்தப் பிச்சைக்காரன். "அம்மா, அநியாயமாக என்னைப்பழி சொல்லாதீர்கள். எனக்குக் கொஞ்சம் எண்ணெயும், உணவும் கொடுத்தால், உங்களை வாழ்த்திவிட்டுப்போவேன்" என்றான்.

மூத்த மருமகள் தன் கையில் ஒரு கம்பு எடுத்துக் கொண்டு, "உன் வாழ்த்துக்களை குப்பையில் போடு. போகிறாயா இல்லை கம்பால் அடித்துத்துரத்தவா?" என்று கம்பை ஆட்டினாள்.

"நீ இன்று சமைப்பதை யாரும் சாப்பிடமுடியாது என்று சாபமிட்டு விட்டுப் பிச்சைக்காரன் சென்று



விட்டான். ஏதோ பைத்தியக்காரன் என்று எண்ணி, மருமகள் தன் வேலையை கவனித்தாள். அன்றிரவு அனைவரும் சாப்பிட அமர்ந்தனர். பரிமாற வேண்டி, மூத்தமருமகள் ஒரு பாத்திரத்தைத் திறந்தால் அதில் புழுக்கள் நெளிந்தன. மற்றொரு பாத்திரத்தில்



எறும்புகள் மொய்த்திருந்தன. எல்லா உணவு பதார்த்தங்களிலும் பூச்சிகளும், புழுக்களுமாய் நிறைந்திருந்தன.

விவசாயி கவலையில் ஆழ்ந்தான். "நம்முடைய செயலால் கடவுளின் கோபத்தைத் தூண்டி விட்டிருக்கிறோம். ஒவ்வொரு சனிக்கிழமையும் ஏன் இப்படி நடக்கிறது.



இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். மீண்டும் கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கி சமைக்க வேண்டிவந்தது. அடுத்த சனிக்கிழமை மீண்டும் கடைசி மருமகளின் முறை வந்தது. அன்றும் அதே பிச்சைக்காரன் வந்தான். அவனை அடையாளம் கண்டுகொண்ட மருமகள், உனக்கு இன்னுமா அரிப்பு சரியாகவில்லை? கவலைப்படாதே, இன்றும் உனக்கு எண்ணெய் தருகிறேன்" என்று சொல்லி எண்ணெய் தந்ததுடன், அவனைக் குளித்துவிட்டு சாப்பிட வருமாறு அழைத்தாள்.

போனமுறை செய்ததுபோல் அன்றும் ஓர் இலைதயாரித்துக் கொண்டு வந்த பிச்சைக்காரன் வயிராற உண்டுவிட்டு, நீயும் உன் கணவனும் நீடுழி வாழ்க என்று வாழ்த்தி விட்டு, முன் போலவே, சாப்பிட்ட இலையை வீட்டுக்கூரையில் செருகி விட்டுச் சென்றான்.

இதைக் கவனித்த மருமகள் அன்றும் ஒன்றும் சொல்லவில்லை. அன்றிரவு உணவு மிகவும் சுவையாக இருந்தது. அதைக் கண்ட விவசாயி, "என்ன அதிசயம்? ஒரு சனிக்கிழமை சாப்பாடு காணாமற்போனது. அடுத்த சனிக்கிழமை பூச்சியும் புழுவுமாக இருந்தது. இந்த சனிக்கிழமை மிகவும் சுவையாக உள்ளது. கடவுளுக்கு இப்போது நம்மீது கோபமில்லை. என்று நினைக்கிறேன் என்றான். உடனே அநதப் பிச்சைக்கரனின் ஞாபகம் வந்த கடைசி மருமகள், அவள் வீட்டிலிருந்த இரண்டு சனிக்கிழமைகள் நடந்த விடயங்களைக் கூறினாள். சாப்பிட்ட இலைகளை அவன் வீட்டுக்கூரையில் செருகியதையும் நினைவு கூர்ந்தாள். உடனே விவசாயி அந்த இலைகளை இன்றும் இருக்கின்றனவா என்று பார்க்கச் சென்றான். அவை இன்னும் அங்கேயே இருந்தன. ஓரிலையை மெதுவாக இழுத்துப் பார்த்தால், அதில் நவரத்தினக் கற்கள் இருந்தன. மற்ற ஒரு இலையை இழுத்துப்பார்க்க அதில் தங்க நாணயங்கள் இருந்தன. அவற்றைக் கண்டு அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர். அப்போது மற்ற இரு மருமகள்களுக்கும் தான் செய்தது நினைவுக்கு வர, அதை வெட்கத்துடனும் வருத்தத்துடனும் எடுத்துரைத்தனர். யாவற்றையும் செவிமடுத்துக் கேட்ட விவசாயி, "எனக்குப் புரிந்து விட்டது. பிச்சைக்காரன் உருவத்தில் வந்தது வேறு யாருமில்லை. சாட்சாத் சனீஸ்வரபகவான்தான். அவர் நம்மீது மகிழ்ச்சி அடைந்து, அளவற்ற செல்வத்தை கொடுத் திருக்கிறார்" என்றான். இந்த நிகழ்ச்சி கிராமத்தில் எல்லாருக்கும் தெரிய, அன்று முதல் சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு எண்ணெய் அளித்து வழி படத் துவங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் பிரதேசத்தின் தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் உடுவில் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகளை பிரதேச செயலாளர் எம்.நந்தகோபாலன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**பாலர்பிரிவு**

**கவிதைப்போட்டி**

து.ரிவின்சிகா (இணுவில் மத்திய கல்லூரி)

**கையெழுத்துப்போட்டி**

நெ.சஜித்தா (யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), த.ஜெனனி (யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), சி.தரணிகா (யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை)

**கனிஷ்ட பிரிவு**

**கவிதைப்போட்டி**

மு.கௌசல்யா (யா/ ஏழாலை மகா வித்தியாலயம்), யோ.துளசி (யா/இணுவில் மத்திய கல்லூரி, .கேசிகா (யா/ இணுவில் மத்திய கல்லூரி)

**கட்டுரைப்போட்டி**

பு.நிரோஸ் (யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), கி.சிந்துஜா (யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), வ.தக்சனா (யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை)

**கவிதைப்பாடல்**

அ.பிரவினா (யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்), இ.டஸ்மி (யா/ உடுவில் முருக மூர்த்தி வித்தியாசாலை), பா.பிரியதர்சினி (யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை)

**சிரேஷ்ட பிரிவு**

**கவிதைப்போட்டி**

க.பவித்திரா (யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்),ஜெ.சஞ்சிகா (யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), கு.தயாளினி (யா/ இணுவில் மத்திய கல்லூரி)

**கட்டுரைப்போட்டி**

பா.கௌசிகா (யா/ இணுவில் மத்திய கல்லூரி), ந.சுகன்யா (யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்), சி.சிந்துஜா (யா/ ஏழாலை மகா வித்தியாலயம்)

**கவிதைப்பாடல்**

பி.பிரியதர்சினி (யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), ஜெ.சஞ்சிகா (யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), சி.ஆன் டெனோஷா (யா/ உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்)

**பாடல் நயத்தல் போட்டி**

பா.வதூஸிகா (யா/ இணுவில் மத்திய கல்லூரி)

**திறந்த பிரிவு**

**பாடல் ஆக்கப்போட்டி**

அ.நேதிகா (இணுவில்), செ.பரமநாதன் (கொக்குவில்), ம.தர்மிக்கா (ஏழாலை வடக்கு)

**நாட்டார் கலை**

**கற்றற்போட்டி**

இ.குகேனி(மின்சார நிலைய வீதி, செ.பரமநாதன் (கொக்குவில்)

**விமர்சனப்போட்டி**

அ.நேதிகா (இணுவில் மேற்கு), ம.தர்மிக்கா (ஏழாலை வடக்கு), வே.பிரசில்லா ராதிகா (ஏழாலை வடக்கு)

**சிறுகதைப்போட்டி**

வே.பிரசில்லா ராதிகா (ஏழாலை வடக்கு), இ.குகேனி (மின்சாரநிலைய வீதி),செ.பரமநாதன் (கொக்குவில்)

**கவிதைப்போட்டி**

செ.பரமநாதன் (கொக்குவில்), சா.மதுரா (ஏழாலை தெற்கு), வே.பிரசில்லா ராதிகா (ஏழாலை வடக்கு)

**சிறுவர் கதைப்போட்டி**

இ.குகேனி (மின்சாரநிலைய வீதி),அ.நேதிகா (இணுவில் மேற்கு), செ.பரமநாதன் (கொக்குவில்). (அ)

# கொலை செய்யப்பட்ட வர்த்தகரின் கைபேசி கால்வாய்குழியிலிருந்து மீட்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் கொலை செய்யப்பட்ட வர்த்தகரின் கைத் தொலைபேசி நீருக்கடியில் இருந்து நீரடி நீச்சல் பிரிவினரின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளது.

புளுமெண்டல் வீதியிலுள்ள கால்வாயில் நேற்றுமுன்தினம் தேடுதல் மேற்கொண்ட போதே மேற்படி கைத் தொலைபேசியின் பாகத்தினைக் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட நிலையில் தற்போது தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளமை இவ் வழக்கில் மேலும் திருப்பத்தை ஏற்படுத்தும் என குற்றப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இக்கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் உட்பட பலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வழங்கிய தகவலுக்கமையவே மேற்படி கைத்தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-5)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.06 25

- ❖1678 - எலேனா பிஸ்கோபியா தத்துவவியலில் முனைவர் பட்டம் பெற்ற முதலாவது பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார்.
- ❖1940 - பிரான்ஸ் அதிகாரபூர்வமாக ஜேர்ம னியிடம் சரணடைந்தது.
- ❖1944 -இரண்டாம் உலகப் போர்: பால்டிக் நாடுகளின் மிகப் பெரும் சமர் சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக பின்லாந்தில் ஆரம்பமானது.
- ❖1950 - வட கொரியாவின் தென் கொரியா மீதான படையெடுப்பை அடுத்து கொரியப் போர் ஆரம்பமானது.
- ❖1967 - உலகின் முதலாவது செய்மதித் தொலைக் காட்சி நிகழ்ச்சியான நம் உலகம் (Our World) 30 நாடுகளில் காண்பிக்கப்பட்டது.
- ❖1975 - இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி நாட்டில் அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்து தேர்தல்கள் மற்றும் மனித உரிமைப் போராட்டங்களைத் தடை செய்தார்.
- ❖1975 - போர்த்துக்கல்லிடமிருந்து மொசாம்பிக் விடுதலை அடைந்தது.
- ❖1983 - லண்டனில் நடந்த உலகக் கிண்ணத் துடுப்பாட்டப் போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் இந்தியா மேற்கிந்தியத் தீவுகளை 43 ஓட்டங்களால் வென்றது.
- ❖1991 - குரோவேசியா, சில்வேனியா ஆகிய நாடுகள் தமது விடுதலையை அறிவித்தன.
- ❖1997 - புரோகிரஸ் ஆளில்லா விண்கலம், ரஷ்ய விண்வெளி ஆய்வுக்கூடம் மீருடன் மோதியது.
- ❖1998 - வின்டோஸ் 98 முதற் பதிப்பு வெளியானது.

**பிறப்புகள்**

- ❖1900 - மவுண்ட்பேடன் பிரபு, பர்மாவின் முதலாம் ஏர்ள் மவுண்ட்பேடன், இந்தியாவின் கடைசி வைசிராய் (இ. 1979)
- ❖1931 - வி. பி. சிங், 10ஆவது இந்தியப் பிரதமர் (இ. 2008)
- ❖1962 - நடராஜா ரவிராஜ், யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் (இ. 2006)
- ❖1966 - டிகெம்பே முடம்போ, கொங்கோ கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புகள்**

- ❖1894 - மரீ பிரான்சுவா சாடி கார்னோ, பிரெஞ்சுக் குடியரசின் அரசுத் தலைவர் (பி. 1837)
- ❖1971 - ஜோன் ஓர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1880)
- ❖1984 - மிஷேல் ஃபூக்கோ, சிந்தனையாளர் (பி. 1926)
- ❖2009 - மைக்கல் ஜாக்சன், பொப் இசைப் பாடகர் (பி. 1958)

### நடராஜா ரவிராஜ்



யாழ்ப்பாணம் தென்மராட்சி சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட ரவிராஜ் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மற்றும் யாழ்.பரியோவான் கல்லூரிகளின் பழைய மாணவர் ஆவார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், 1987 ஆம் ஆண்டு இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதிவு செய்தார். **ரவிராஜின் "ரவிராஜ அசோசியேட்ஸ்"** எனும் சட்ட நிறுவனமானது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகள், அவசரகாலச் சட்டத்தின் கீழான வழக்குகளுக்காக வாதாடியது. கொழும்பில் மனித உரிமைகள் சட்டத்தரணியாகவும் இவர் பணியாற்றினார்.

**அரசியலில் இணைவு**

ரவிராஜ் சட்டத்தரணியாக இருந்து அரசியலில் நுழைந்தார். 1984 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரையிலும் 1993 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டு வரையிலும் மனித உரிமைகள் இல்லத்தை நடத்தினார். 1987 ஆம் ஆண்டில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியில் இணைந்தார். 1990 ஆம் ஆண்டு அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினரானார்.

1997 ஆம் ஆண்டு யாழ். மாநகரசபை பிரதி முதல்வராகவும், 1998 ஆம் ஆண்டில் யாழ். மாநகரசபை முதல்வராகவும் தெரிவானார்.

2001 ஆம் ஆண்டு மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களில்

பெற்றார்

**மறைவு**

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி காலை 8 மணியளவில் ரவிராஜ் கொழும்பு நாரஹேன்பிட்டிய மனிங்ரவுனில் உள்ள அவரது வீட்டுக்கருகில் அவர் மீது இனந்தெரியாதோரால் பலனின்றி உயிரிழந்தார்.

# பொதுநலவாய இணையத்தில் பொய்யான தகவல் வெளியீடு

(கொழும்பு)

பொதுநலவாய தலைவர்களின் உச்சி மாநாட்டு இணையத்தளத்தில் இலங்கையில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம்களின் தொகையைக் குறைத்துக் காட்டும் புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக இணை யத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாடு தொடர்பான தகவல்களை வழங்கும் CHOGM 2013.lk என்ற அதிகார பூர்வ இணையத்தளம் கடந்தவாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அவ் இணையத்தளத்தில் இலங்கை தொடர்பான விபரங்கள் இடம் பெற்ற பகுதியில், இலங்கைத் தமிழர்களின் சனத்தொகை 3.9 வீதம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் 2012 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப் பின் படி இலங்கையில் வாழும் இலங்கைத் தமிழர்கள் 11.2 வீதம் எனவும் இலங்கைத் தமிழர்களை விட அதிகமாக, மலையகத் தமிழர்கள் 4.6 வீதம் வாழ்வதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் முஸ்லிம்களின் தொகையையும், 9.7 வீதம் என்பதற்குப் பதிலாக, 7.2 வீதம் என்று குறைத்துக் காட்டப்பட்டிருந்ததோடு, 12.6 வீதமாக உள்ள இந்துக்களை 7.1 வீதம் என்றும் அந்த இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தவறான தரவுகள் பதிவேற்றப்பட்டமை குறித்து வெளிநாட்டு செய்தியாளர் ஒருவர் வலைப்பதிவில் சுட்டிக்காட்டியதை தொடர்ந்து, நான்கு நாட்களின் பின்னர், கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் தரவுகள் திருத்தப்பட்டுள்ளன.

எனினும், திருத்தம் செய்யப்படுவதற்கு முன்னதாகவே அந்த இணையத்தளத்தை 10 ஆயிரம் பேர் பார்வையிட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)

# கும்பாபிஷேகம்

மண்டைதீவு தெற்கு முகப்புவயல் ஞானவைரவர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கும்பாபிஷேகம் செய்யப்படவுள்ளது. இதற்கான கிரியைகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

**விழாவில் சின்மயாமிஷனின் யாழ்ப்பாணக்கிளை வதிவிட ஆச்சாரியன் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிஜி கலந்து அருளாசி வழங்க உள்ளார்.** (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மீண்டும் அரசாங்கத்தின் ஊடக ஒழுக்கக் கோவை!

## சிறுபான்மை இனங்களைப் பாதிக்கும்

அரசாங்கமானது, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்காக ஒழுக்கக் கோவையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. நாட்டில் எத்தனையோ ஒழுக்கக்கோவைகள் இருக்கும்போது அரசாங்கம் புதிதாக மற்றொரு கோவையை ஏன் முன் வைத்தது என்பது தெளிவில்லாமல் இருக்கிறது. அதேவேளை, பலர் இந்த விடயத்தில் அரசாங்கத்தின் நோக்கங்களைப் பற்றி / கடுஞ் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால், தயாரிக்கப் பட்டு, பொதுவாக நாட்டில் ஏறத் தாழ அனைத்து சுதந்திர ஊடகவியலாளர்ளாலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒழுக்கக் கோவையொன்று இருக்கிறது. அதுமட்டுமல்லாது அக் கோவையின் அமுலாக்கத்தை மேற் பார்வை செய்வதற்காக இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவும் இருக்கிறது.

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, ஒழுக்க நெறிகளை எவ்வாறு பேணுவது என்பதைப் பற்றி நாடளாவிய ரீதியில் ஊடகவியலாளர்களுக்காக பயிற்சி, செயலமர்வுகளையும் நடத்திவரு கிறது. அதேவேளை பத்திரிகைகள் அவ்வொழுக்கக் கோவையை மீறும் போது ஆணைக்குழு அதைப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு தொடர்ந்து சுட்டிக்காட்டிவருகிறது. பத்திரிகைகளுக்கு எதிராக தனி நபர்களோ அல்லது நிறுவனங்களோ செய்யும் முறைப்பாடுகளையும் ஆணைக்குழு விசாரித்து வருகிறது.

அதற்குப் புறம்பாக, சில நிறுவன்ங்கள், தமக்கென்றே ஒழுக்கக் கோவைகளை வைத்திருக்கின்றன. ரூபவாஹினி கூட்டுத்தாபனம், நெத் எஃப்.எம்., வானொலி நிறுவனம் மற்றும் ராவய பத்திரிகை அவ்வாறான நிறுவனங்களாகும். போதாக் குறைக்கு சர்வதேச ஊடக நிறுவனங்களின் ஒழுக்கக் கோவைகளையும் அவசியமாக இருந்தால் பின்பற்ற முடியும்.

அவையெல்லாம் இருக்கையில் அரசாங்கம், ஏன் மற்றோர் ஒழுக்கக் கோவையை தயாரிக்க வேண்டும்? அதன் வாசகங்களை ஆராயும்போது ஓரளவிற்கு அரசாங்கத்தின் நோக்கத்தை புரிந்து கொள்ளலாம். ஆனால், மேலோட்டமாக அதன் வாசகங்களைப் பார்க்கும்போது அதில் எந்தக் குறையும் இருப்பதாகத் தெரிய வில்லை.

இவ்விடயம் ஊடக அமைப்புக்களை மட்டுமோ அல்லது எதிர்க் கட்சிகளை மட்டுமோ பாதிக்கக் கூடிய விடயம் அல்ல. 13-வது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான சர்ச்சை உச்சக் கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில், அது தமிழ் ஊடகங்களையும் பாதிக்கலாம்.

இனப்பிரச்சினை விடயத்தில் அநேகமாக சிறுபான்னைம மக்கள் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சித்துவரும் நியைில் இது, சிறுபான்மையினர் நலன்களையும் பாதிக்கலாம், எனவே இது இனப் பிரச்சினையோடு சம்பந்தமில் லையே என்று சிறுபான்மையினர் உதாசீனமாக இருந்து விடமுடியாது.

இது சிறுபான்மை மக்களை பாதிக்காத விடயமாக இருந்தாலும் பொதுவாக சமூகத்தைப் பாதிக்கும் சமூக, பொருளாதார பிரச்சினைகள் விடயத்தில் அம்மக்களும் கரிசனை காட்டத் தான் வேண்டும். அரசாங்கத்தின் ஊடக ஒழுக்கக் கோவையின் பிரதான பிரச்சினை என்னவென்றால், அதில் பல வாசகங்களுக்கு பல அர்த்தங்களை கொடுக்கக் கூடியதாக இருப்பதே. இதனை அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஹியூமன் ரைட்ஸ் வோச் நிறுவனமும் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமக்களின் எதிர்ப்புக்கு களங்கத்தை ஏற்படுத்தல், நாட்டின் ஒழுக்க விதியை அல்லது பொதுமக்களின் இரசனை மற்றும் ஒழுக்கத்தின் தரம் தாழ்த்துதல் ஆகிய விடயங்களை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பது அக்கோவையின் முதலாவது விதியாக இருக்கிறது.

பார்த்த பார்வைக்கு இது சிறந்த வாசகமாகத் தான் தெரிகிறது. ஆனால், தேர்தலொன்றின் போது, ஆளும் கட்சி யொன்றுக்கு எதிராக கருத்து வெளியிடுவதையும், வேண்டும் என்றால் பொதுமக்களின் எதிர் பார்ப்புக்கு களங்கத்தை ஏற்படுத்தல் என்பதாக குற்றஞ்சாட்டலாம். பொதுமக்களின் எதிர்பார்ப்பு எது என்பதை யார் தீர்மானிப்பது என்பதே இங்குள்ள முக்கிய பிரச்சினையாகும்.

நாட்டின் ஒழுக்க விதியை தாழ்துதல் என்றும் இங்கு குறிப்பிடப் படுகிறது. நாட்டின் ஒழுக்கவிதி என்பது என்ன? யார் அதனை தீர் மானிக்கப் போவது? இவை தெளி வில்லாத விடயங்களாகவே உள்ளன. பொதுமக் களின் ஒழுக்கத்தின் தரம் என்றும், இதேவசனத்தில் குறிப்பிடப் படுகிறது. நாட்டின் ஒழுக்கவிதி வேறு, பொது மக்களின் ஒழுக்கத்தின் தரம் வேறா? யார் இதனைத் தீர்மானிப்பது?

இக்கோவையில் இதைவிட பாரதூரமான வாசகம் ஒன்று இருக்கிறது. அதாவது, வெளிநாட்டு உறவுகளை பாதிக்கும் விமர்சனங்களை தவிர்க்க வேண்டும் என்பதே அது. இதன் பிரகாரம் இந்தியா- இலங்கையின் இனப்பிரச்சினையை முறையாக கையாளவில்லை என்று ஓர் எழுத் தாளர் எழுதினால், சிலவேளை அதையும் வெளிநாட்டு உறவுகளைப் பாதிக் கும விமர்சனமாக அரசாங்கம் கருதலாம்.

சில மாதங்களுக்கு முன்னர் பிரிட்டன் சில இலங்கை தமிழர்களை தனது நாட்டிலிருந்து வெளியேற்றியது. இதை விமர்சிப்பதும் வெளிநாட்டு உறவுகளை பாதிக்கும் விடயமாக எடுத்துக் கொள்ளலாம். முஸ்லிம்கள் அநேகமாக இஸ்ரேலை விமர்சித்து எழுதுவார்கள். அதையும் வெளிநாட்டு உறவுகளைப் பாதிக்கும் விடயமாக எடுத்துக்கொள்ளலாம். அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகள் மனித உரிமை விடயத்தில் இரட்டை வேடம் பூண்டு செயற்படுவதாக அரச ஆதரவாளர்கள் பல வேளைகளில் கூறுவார்கள். அதையும் வெளிநாட்டு உறவுகளை பாதிக்கும் விமர்சனமாக கருதலாம். ஆனால், அரசாங்க ஆதரவாளர்களையும் குறை கூறும் அளவிற்கு அரசாங்கத்தின் அரசியல் ஒழுக்க நெறிகள் உறுதியாக இருக்குமோ என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

ஜனாதிபதி, நீதித்துறை மற்றும் தேசத்தினுடைய ஒருமைப்பாட்டை பாதிக்கும் விடயங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என அரச கோவையின் தமிழ்ப் பிரதி கூறுகிறது. ஆனால், அதேவாசகம் நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டமியற்றும் துறை ஆகியவற்றின் மேன்மைக்கு எதிரான விடயங்களைத் தவிர்க்க வேண்டும் என்று ஆங்கிலப் பிரதியிலும் நிறை வேற்றுத்துறை, நீதித்துறை மற் றும் சட்டமியற்றும்துறை ஆகிவற் றின் மீது மக்களிடம் இருக்கும் கௌரவத்தை பாதிக்கும் விடயங் களை தவிர்க்கவேண்டும் என்று சிங்களப் பிரதியிலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

நிறைவேற்றுத்துறை, நீதித்துறை மற்றும் சட்டமியற்றும் துறை என்ற மூன்று துறையும் சேர்ந்தே அரசு உருவாகிறது. எனவே, அம்மூன்று துறையின் மேன்மையைப் பாதிக்கும் விடயங்களை தவிர்க்க வேண்டும் என்றாலும், அத்துறைகள் மீது மக்களிடம் இருக்கும் கௌரவத்தைப் பாதிக்கும் விடயங்களைத் தவிர்க்க வேண்டும் என்றாலும், அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது என்ற நிலைமையே உருவாகிறது. ஏனெனில் அவ்வாறான விமர்சனத்தால் அரசின் கௌரவம் பாதிக்கப்படுகிறது என்றோ அல்லது அதன் மேன்மை பாதிக்கப்படுகிறது என்றோ வாதிட முடியாது. பொதுமக்களை தவறாக வழிப்படுத்தும் விடயங்களை தவிர்க்க வேண்டும் என்பது மற்றொரு வாசகமாகும். குறிப்பிட்டதோர் கருத்து மக்களைத் தவறாக வழிப்படுத்துவதாக தீர்மானிக்கப் போவது அரசாங்கமே. எனவே, ஓர் அரசாங்கம் தாம் விரும்பாத சகல கருத்துக்களையும் மக்களைத் தவறாக வழிப்படுத்தும் கருத்தாகக் கருதலாம்.

மதக்குழுக்கள் மற்றும் சமூகங்களுக்கு அவதூறு ஏற்படும் அல்லது இனவாதத்தை, மதப் பூசல்களை தூண்டும் விடயங்களை தவிர்க்க வேண்டும் என்றும் வன்முறைகளை ஊக்கப்படுத்தும் அல்லது தூண்டி விடும் உள்ளடக்கங்கள் மற்றும் தேசியத்துக்கு எதிரான நடைமுறைகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இரண்டு வாசகங்கள் அரசாங்கக் கோவையில் இருக்கின்றன. இரண்டும் தற்போதைய நிலைமையில் பொருத்தமானதாகவும் பாராட்டக் கூடியதாகவும் இருக்கின்றன.

ஆனால், மதக்குழுக்கள் மற்றும் சமூகங்களுக்கு அவதூறு ஏற்படும் அல்லது இனவாதத்தை, மதப்பூசல் களை தூண்டும் விடயங்கள் தொடர்பாக அசாத் சாலிக்கு எதிராக நடவடிக்கை எடுத்தவர்கள் பொதுபல சேனா, சிஹல ராவய, ராவணா பலய போன்ற பல்வேறு குழுக்கள் தொடர்பாக அவ்வாறான முறைப்பாடுகள் இல்லை என்கிறார்கள். எனவே, அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஓரிரு தினங்களுக்கு முன்னர் கூறியதைப்போல் முதலில் அரசியல் வாதிகளுக்கு ஒழுக்கக் கோவை யொன்றை தயாரிக்க வேண்டும்.

ஊடகவியலாளர்களுக்கான இவ் ஒழுக்கக் கோவையை மீறுவோர் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது இன்னமும் கூறப்படவில்லை. இவை சட்டமாக்கப்படுமா என்பதும் இன்னமும் கூறப்படவில்லை.

-எம்.எஸ்.எம்.ஐயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனுக்குள் நுழைவோருக்கு பிணைத்தொகை விதிக்க முடிவு

பிரிட்டனுக்கு வரும் குடியேற்ற விதிகளை மீறும் அபாயம் உள்ள இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் ஏனைய நாட்டவர்களுக்கு நாட்டுக்குள் வரும் முன் விசா பிணையாக ரொக்கத் தொகையைப் பெற பிரிட்டன் அரசு திட்டமிட்டுள்ளது. பிரிட்டனின் சண்டே டைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தியில் எதிர்வரும் நவம்பர் முதல் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

இந்த விசா பிணைக்கு உள்ளாகும் நாடுகளில் பங்களாதேஷ் மற்றும் கானாவும் உள்ளடங்குகின்றன. இதன்படி 6 மாத பயண விசாவில் வரும் 18 வயதுக்கு மேற்பட்டோரிடம் 4 ஆயிரத்து 600 பொலர்களைப் பிணைத்தொகையாக அறவிட பிரிட்டன் அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு பெறப்படும் பிணைத் தொகை விசா காலத்தையும் மீறி தங்குவோரிடம் அபராதமாக ஈட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் தொடர்பில் பிரிட்டனின் உள்நாட்டு செயலாளர் தெரேசா மே பிரதமர் டேவிட் கமரூனின் கன்சர்வேட்டிவ் கட்சியின் அனுமதியைப் பெற காத்திருப்பதாக மேற்படி பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டில் பிரிட்டனுக்கு வருவோரின் எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைக்க பிரதமர் கமரூன் எதிர் பார்த்துள்ளார். (அ)



இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் நெல்லியடி கிளையின் வாடிக்கையாளராகிய கயமுகன் காட்வெயார் உரிமையாளர் இ.ராகுலனின் ஆயுட்காப்புறுதிக்கான மரணக் கொடுப்பனவு ரூபா அறுபத்தொரு இலட்சத்து ஐம்பதாயிரம் (61,50,000 /=) ரூபாவை அவரது தாயாரிடம் நெல்லியடிக் கிளை முகாமையாளர் கு.ஆறுமுகன் வழங்கினார். அருகில் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி. இ.சிவசுந்தரம், காப்புறுதி ஆலோசகர்களான ம.சுமன், ம.உதயசீலன் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:- பருத்தித்துறை செய்தியாளர்)

# எனது கட்சியின் பிரதிநிதிகளை தெரிவுக் குழுவில் உள்ளடக்கவில்லை

## அரசு துரோகம் இழைத்துவிட்டது என்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிந்துரைகளைக் குப்பையில் போட வேண்டுமென தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், நாட்டின் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஷ் பிரதிநிதிகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் உள்ளாக் காமை பாரிய தவறாகும் என குறிப்பிட்டுள்ளார்.

கல்முனையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறான தெரிவுக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. எமது கட்சியின் பிரதிநிதிகளை உள்ளடக்காமையின் மூலம் அரசாங்கம் பாரிய அநீதி இழைத்துள்ளது.

சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியுள்ள அரசாங்கம், பிரதான முஸ்லிம் கட்சியின் பிரதிநிதிகளை உள்ளடக்கத் தவறியுள்ளது.

அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகளினால் சர்வதேசத்தின் நம்பிக்கை மேலும் வலுவிழக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாம் தடவையாகவும் தேர்தலில் போட்டியிட ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் 18 ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்தது எனவும் அவ்வாறு ஆதரவளித்த கட்சிக்கு அரசாங்கம் காட்டும் நன்றி விசுவாசம் கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (அ-5)

# வாகன விபத்தில் ஒருவர் பலி; 13 பேர் காயம்

பதுரலிய- கலவான வீதியில் மொரபிட்டிய சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

பதுரலியவிலிருந்து அத்வெல்கொட நோக்கி பயணித்த பேருந்து ஒன்று மொரபிட்டிய சந்திக்கு அருகில் வீதியை விட்டு விலகி தானசாலை ஒன்றுடன் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் உயிரிழந்தவர் கஹவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதான பெண் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 9 பேர் பதுரலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை மேலும் நால்வர் நாவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் விபத்து தொடர்பில் பேருந்து சாரதி பதுரலிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-5)

# பீடை நாசினிகளை பாதுகாப்பாக பாவிப்போம்!

தொடர்ச்சியாக அதிகரித்துவரும் சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது நாம் முகம் கொடுக்கும் ஒரு சவால் ஆகும். ஆனால், இவ் அதிகரிப்புக்கு ஏற்ப நிலத்தின் அளவை அதிகரிக்க முடியாது. பயிர் செய்யும் நிலப்பரப்புக்கும் ஒரு எல்லைப்பாடு உண்டு. உலகில் அதிகரிக்கும் சனத்தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்ட பயிர் செய்யும் நிலத்தின் அளவு குறைவாகவே உள்ளது.

1965 இல் ஒரு தனிநபர் உணவுத் தேவைக்கான நிலத்தின் அளவு 4 ஆயிரம் சதுர மீற்றர் ஆகவும் 1980 இல் 3 ஆயிரம் சதுர மீற்றர் ஆகவும் 1988 இல் 2 ஆயிரத்து 700 சதுர மீற்றர் ஆகவும் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2025 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகை 8 ஆயிரத்து 500 மில்லியனாக இருக்கும் எனவும் தனிநபருக்கான உணவுக்காக பயிரிடும் நிலத்தின் அளவு ஆயிரத்து 600 சதுர மீற்றர் ஆகவும் இருக்கும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. எனவே, நாம் தனிநபர் உணவுத் தேவை க்காகப் பயிரிடும் நிலப்பரப்பில் இருந்து விளைச்சலை அதிகரிக்க வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதை மேற்கூறப் பட்டவற்றில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

அவ்வாறு அதிகரிக்க வேண்டுமெனில் பயிர்ச் செய்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட பயிர்ப்பாதுகாப்பு மிகவும் முக்கிய பங்கை வகிக்கும். இந்நிலையில் பீடை நாசினிகளின் பங்கும் பிரதானமானதொன்றாகும். புதிய திருந்திய உச்ச விளைவு தரும் வர்க் கங்கள் நில அமைப்பு, மாற்றுப்பயிர்கள், சமச்சீர்ப் பசளை பிரயோகத்துடன் பயிர்ப் பாதுகாப்பும் பங்களிப்புச் செய்தால் மட்டுமே அதிகரித்த விளைவு என்பது சாத்தியமாகும்.

ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பில் பீடை நாசினிப் பாவனை தற்கால விவசாயத்தில் தனியிடத்தைப் பிடித்துள்ளது. பீடை நாசினிகள் கொடிய நச்சுத்தமை கொண்டவை என்பதனால் அவற்றைத் தவறாகப் பிரயோகிப்பதால் தெளிப்பவர்களும் சூழலும் பாதிக்கப்படலாம். பீடைநாசினி மூலம் நாம் எதிர்பார்க்கும் பீடைக்கட்டுப்பாட்டை அடைவதுடன் பாதுகாப்பற்ற முறையில் பாவிப்பதனால் கையாள்பவருக்கும் சூழலுக்கும் ஏற்படும் அபாயத்தை தவிர்த்துக் கொள்வதும் மிக முக்கியமானதாகும். விவசாயிகள் பீடை நாசினிகளைப் பிரயோகிக்கும் போது தங்களையும் சமூகத்தையும் சூழலையும் கவனத்திற் கொள்ள வேண்டும். பீடைநாசினிகளைத் தவறான வழியில் கையாள்வதனால் ஏற்படும் தீங்குகள் பற்றி அறியாத விவசாயிகள்



தமது உற்பத்திகளை நாசினி விசிறிய மறு நாட்களிலேயே சந்தைப்படுத்துவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, விவசாயிகள் பீடைநாசினி சம் பந்தமான அனைத்து விடயங்களிலும் பூரண அறிவைப் பெறுவதுடன் அதன் பாதுகாப்பற்ற பாவனைமூலம் ஏற்படக் கூடிய அபாயத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் இக் கட்டுரையில் அடங்கியுள்ள ஆலோசனைகளை உரியமுறையில் கைக் கொள்ளுதல் வேண்டும்.

01. பொருத்தமான பீடைநாசினிகளைத் தெரிவு செய்யுங்கள்.

பீடை நாசிகள் கட்டுப்படுத்தப்படவுள்ள இலக்கின் அடிப்படையில் கீழ்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

1. பூச்சி நாசினி
   பூச்சிகளைக் கட்டுப்படுத்த
2. பூஞ்சண நாசினி
   பூஞ்சணங்களைக் கட்டுப்படுத்த
3. களை நாசினி
   களைகளைக் கட்டுப்படுத்த
4. சிற்றுண்ணி நாசினி
   சிற்றுண்ணிகளைக் கட்டுப்படுத்த
5. நத்தை நாசினி
   நத்தைகளைக் கட்டுப்படுத்த
6. கொறிப்பான் நாசினி
   கொறிப்பான்களைக் கட்டுப்படுத்த
7. விலாங்குப்புழு நாசினி
   விலாங்குப்புழுக்களைக் கட்டுப்படுத்த

எனவே, எமது பயிரைத் தாக்கி சேதப்படுத்தும் இலக்கினை சரியாக இனம் கண்டு பொருத்தமான பீடைநாசினியைத் தெரிவு செய்தல் வேண்டும். இதனால் கீழ்வரும் நன்மைகள் ஏற்படும்.

♦ இலக்கு வினைத்திறனாகக் கட்டுப்படுத்தப்படும்.

♦ உணவுச் சங்கிலியில் தேவையற்ற நஞ்சடைதல் தவிர்க்கப்படும்.

♦ இலக்கற்ற பூச்சிகள், நன்மை தரும் பூச்சிகள் பாதுகாக்கப்படும்.

♦ பீடைகள் எதிர்ப்புத் தன்மையை உருவாக்காது.

♦ இயற்கை சமநிலை பேணப்படும்.

♦ சூழல் மாசடைதல் குறைக்கப்படும்.

02. பொருத்தமான பீடைநாசினியைத் தெரிவு செய்து அதனை வாங்கிய பின் கொண்டு செல்லும்போது பின்வருவனவற்றைக் கைக்கொள்ளுங்கள்.

♦ நன்றாகப் பொதி செய்யப்பட்டுள்ளதா? எனப்பார்க்கவும்

♦ தனியாக எடுத்துச் செல்லவும்.

♦ உணவுப் பண்டங்கள், கால்நடை உணவுகள் முதலானவற்றுடன் கொண்டு செல்வதைத் தவிர்க்கவும்.

♦ கொண்டு செல்வதற்கு சிறுவர்களை அனுமதிக்காதீர்கள்

♦ முற்பகல் வேளையில் எடுத்துச்செல்லவும்

♦ சிந்தினால் ஒற்றி எடுக்க துணித் துண்டை எடுத்துச் செல்லவும்.

♦ பொதுப் போக்குவரத்து வாகனங்களில் எடுத்துச் செல்ல வேண்டாம்.

வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்ட பீடை நாசினியைக் களஞ்சியப்படுத்தி வைக்கும் போது கவனியுங்கள்.

♦ படுக்கை அறைகள், குசினி, குசினிக் களஞ்சிய அறை என்பவற்றில் களஞ்சியப்படுத்துவதை தவிர்க்கவும்.

♦ சிறு பிள்ளைகள், செல்லப்பிராணிகளுக்கு எட்டாத உயரமான இடத்தில் பெட்டிகளில் தனியாக வைத்து பூட்டவும்.

பெட்டிக்கு இடும் பூட்டு சிறிய துவாரம் கொண்டிருத்தல் நன்று.

♦ நெருப்புக்கு அண்மையில் அதிக உஷ்ணம், சூரிய ஒளி படுமிடங்களில் களஞ்சியப்படுத்துவதைத் தவிக்கவும்.

♦ சேமிக்கும் பெட்டியை காற்றோட்டாமன இடத்தில் வைக்கவும். (தொடரும்)

**க.தனபாலசிங்கம்**
**பாடவிதான உத்தியோகத்தர்,**
**(பயிர்ப்பாதுகாப்பு)**
**விவசாயத் திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வை முன்னரே ஏற்றிருக்க வேண்டும்-ரிசாத்

(பூந்தோட்டம்)

**வடக்கும் கிழக்கும் பிரிந்துவிட்ட நிலையில் அதனை பாதுகாப்பதற்காக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் செல்ல வேண்டியிருக்கின்றது. எனவே, நாம் அன்றே 13 ஆவது திருத்தத்தை மனசாட்சியுடன் ஏற்றுக் கொண்டிருந்தால் இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்காது என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**



வன்னி தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டவர்தான் டக்ளஸ் தேவானந்தா. அவர் அதே நிலைப்பாட்டில்தான் அன்றில் இருந்து இன்றுவரை இருக்கின்றார். சகல அதிகாரங்களும் நிறைந்த வடக்கு-கிழக்கு இணைந்த அந்த தீர்வை நம்மவர் அன்று ஏற்றுக் கொண்டிருந்தால் இத்தனை உயிர்களையும்உடைமைகளையும் உறவுகளையும் இழந்திருக்க வேண்டிய தேவையும் இருந்திருக்காது. அத்துடன் சிறையில் இருக்கும் எத்தனையோ உறவுகள் எம்மோடு கூட இருப்பதையும் கண்டிருக்கலாம்.

ஆனால், இன்று நடக்கும் போராட்டம் என்ன? அது வடக்கும் கிழக்கும் இணைந்த அல்லது அத்தனை அதிகாரங்களையும் கொண்ட 13ஆவது திருத்தத்தை எவ்வாறு பாதுகாப்பது என்பதாக இருக்கின்றது.

வடக்கும் கிழக்கும் பிரிந்துவிட்ட நிலையில் அதனை பாதுகாப்பதற்காக இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்கும் செல்ல வேண்டியிருக்கின்றது.

எனவே, நாம் அன்றே 13 ஆவது திருத்தத்தை மனச்சாட்சியுடன் ஏற்றுக்கொண்டிருந்தால் இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்காது.

எனினும் இவ்வாறான நிலையில் வட மாகாணத்தில் கடந்த சில தினங்களாக நல்ல சில நியமனங்களை நாம் வழங்கி வருகின்றோம்.

இந்த நியமனங்கள் உங்களுக்கு கிடைத்ததனால் நீங்கள் எவ்வாறு குடும்பத்துடன் சந்தோசமாக நாட்களை கழிக்கின்றீர்களோ, அதுபோல் இந்த மாகாணத்தில் கஷ்டப்பட்ட, துன்பப்பட்ட ஏனைய மக்களும் சிறப்பாக வாழ வேண்டும். அந்த நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகதான் இந்த அரசாங்கத்தின் பங்காளிகளாக நாம் நிற்கின்றோம்.

எனினும் இவ்வாறு சேர்ந்திருப்பவர்களைப் பார்த்து சமூகத்தைக் காட்டிக்கொடுப்பவர்கள், துரோகம் செய்பவர்கள், மண்ணை காட்டிக் கொடுப்பவர்கள் என சில ஊடகங்களும் கல்விமான்களும் அரசியல்வாதிகளும் சொல்கின்றார்கள்.

இந்த வகையில் சிதைவடைந்திருந்த வட மாகாணத்தை மனச்சாட்சி உள்ள எந்த மனிதன் முன்பு பார்த்தாலும் கடந்த சில வருட அபிவிருத்தியையும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தையும் ஏற்றுக் கொள்வார்கள்.

நாங்கள் ஆயிரக்கணக்கான நியமனங்களை வழங்குகின்ற போது கட்சி, இனம், மதம் எதுவும் பார்க்காது எமது பிரதேசத்தவர்கள், இந்த மண்ணின் மைந்தர்கள், இவர்களது எதிர்காலம் நிம்மதியாக அமைய வேண்டும் என்ற இலட்சியத்தை மையமாக வைத்துதான் வழங்கிவருகின்றோம்.

ஆனால், நானும் டக்ளஸ் தேவானந்தாவும் பல கோடி ரூபா பணத்தை செலவு செய்து வட மாகாணத்தில் அபிவிருத்தியை செய்கின்றோம். ஆனால், அரசியல் ரீதியான எந்த மாற்றத்தையும் காணவில்லையே என ஜனாதிபதி கேட்கின்றார்.

எனவே, நீங்கள் யதார்த்த ரீதியாக சிந்திக்க கடமைப்பட்டுள்ளீர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (3-266-250)

## கல்லாறு கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட கல்லாறு கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் மேற்குறித்த கிராமத்திற்கு கண்டாவளை பிரதேச செயலகமும் கண்டாவளை பிரதேச சபையும் குடிநீரை வழங்கி வந்தன.

ஆனால், தற்போது பிரதேச செயலகம் மட்டுமே குடிநீரை வழங்கி வருகின்றமையாலேயே இக் குடிநீர்த் தட்டுப்பாடு தற்போது நிலவுகின்றது.

இவ்வரட்சிக் காலத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டால் அப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, பிரதேச சபையினர் குடிநீரை வழங்கி உதவ வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (3-264)




## பெண் நாய்களுக்கான சத்திரசிகிச்சை

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு பெண் நாய்களுக்கான கருத்தடை சத்திர சிகிச்சைகள் கிளிநொச்சி சுகாதார திணைக்களத்தினரின் உதவியுடன் கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட வைத்தியர் குழுவினரால் கடந்த ஒரு வாரங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை வலைப்பாடு, நாச்சிக்குடா, நாகபடுவான், முக்கொம்பன் ஆகிய கிராமங்களில் 300 இற்கும் மேற்பட்ட பெண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

தொடர்ந்து ஏனைய கிராமங்களிலும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன் அதற்கான திகதிகளும் இடங்களும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(3-84)

## செட்டியகுறிச்சி-கறுக்காய் வீதி காப்பெற் வீதியாக புனரமைப்பு

(பூநகரி)

வடக்கின் வசந்தம் மகநெகும திட்டத்தினூடாக பூநகரி நாகதேவன் துறையிலுள்ள செட்டியகுறிச்சி சந்தி தொடக்கம் கறுக்காய் தீவு வரையான வீதி 5 கோடி 75 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் காப்பெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாமலிருந்த செட்டிய குறிக்சி சந்தியிலிருந்து கறுக்காய் தீவு வீதி வரையான 2 கிலோமீற்றர் நீளமான வீதியே தற்போது புனரமைக்கப்பட்டுவருகின்றது.

இவ்வீதிப் புனரமைப்பிற்காக வடக்கின் வசந்தம் மகநெகும திட்டத்தினூடாக 5 கோடி 75 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத காலம் நிறைவடைந்துள்ள நிலையில் இன்னும் நான்கு மாதங்களில் வீதியின் புனரமைப்பு வேலைகள் முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வீதி காப்பெற்றாக மாற்றமடைவதால் அப்பகுதியிலுள்ள விவசாயிகள், அலுவலர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பயனடையவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3-84)

## பல வருடங்களின் பின்னர் ப.நோ.கூ.ச. நிர்வாக தெரிவு

(சிவநகர்)

கிளிநொச்சி கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்க நிர்வாக சபை தெரிவு பலத்த இழுபறிகளின் மத்தியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சி.தவராசா தலைமையில் காலை 10 மணிக்கு இந்த நிர்வாக சபை தெரிவு நடைபெற்றுள்ளது.

இதன்படி தலைவராக க.விஜயசேகரன், உப தலைவராக ச.விக்னேஸ்வரராசா, அங்கத்தவர்களாக ச.கோமேதகரன், இ.செல்வராசா, ச.யேசுவான், ந.திவ்வியராஜ், க.தனுசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மீள்குடியேற்றம் நடைபெற்ற பின்பு ஜனநாயக ரீதியில் கிளைக் குழுக்கள் தெரியப்பட்டு முதலாவதாக இந்த நிர்வாக சபை தெரியப்பட்டுள்ளது.

கிளைக்குழு தேர்தல்கள் நடைபெற்று நிர்வாக சபை தெரிவு நடைபெறாது இருந்த நிலையிலும் 3 மாதங்களில் இக் கிளைக் குழுக்களின் தெரிவுகள் இரத்தாக கூடிய நிலையில் இருந்தது.

இந்த நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் கலந்து கொண்டிருந்தார். (3-254)





வவுனியா தெற்கு வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்கான சகபாடி ஆதரவு குழு கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. இதில் [illegible] அதிகாரி எஸ்.சிவரூபன் கருத்துரை வழங்குவதையும் கலந்து [illegible] ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூந்தோட்ட செய்தியாளர்)

## வடமாகாண வலைப்பந்தாட்ட போட்டியில் யாழ்.மாவட்ட அணிகள் சம்பியன்

(பூந்தோட்டம்)

வட மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டுப்போட்டிகளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழ்மை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் யாழ்.மாவட்ட அணிகள் சம்பியனாகியுள்ளன என வட மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

15 வயது பிரிவு போட்டியில், வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாமிடத்தையும் மன்னார் வலயத்தை சேர்ந்த புனித ஆன்ஸ் மத்திய மகாவித்தியாலம் இரண்டாமிடத்தையும் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளதுடன்,

17 வயது பிரிவில் வலிகாமம் வலயத்தை சேர்ந்த அராலி சரஸ்வதி வித்தியாலயம் முதலாமிடத்தையும் யூனியன் கல்லூரி இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணம் வலயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளன.

19 வயது பிரிவில் வலிகாமம் வலயத்தை சேர்ந்த யூனியன் கல்லூரி முதலாமிடத்தையும் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி இரண்டாமிடத்தையும் விக்டோரியா கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (3-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயாறில் தென்னிலங்கை மீனவர்கள் வெளியேற்றப்படுவார்களா?

## பாதிக்கப்பட்ட மீனவர்கள் கேள்வி

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று செம்மலை கிழக்கு கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட நாயாறு கடற்கரை கிராமத்தில் வந்து குடியேறியுள்ள சிங்கள மக்களை தமது சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்புமாறு மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்திருந்தபோதும் இதுவரை அவர்கள் வெளியேற்றப்படவில்லை.**

நாயாறு கடற்கரை கிராம மக்கள் யுத்தத்திற்கு பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டு இங்கு சுமார் 72 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் 90 வீதமானவர்கள் மீனவ குடும்பங்களாகவுள்ளதுடன் ஆரம்பகாலம் முதல் யுத்தம் நிறைவடையும் வரை தமிழ் மக்களே நாயாறு இறங்குதுறையின் பூர்வீக [illegible]களாக இருந்துள்ளனர்.

ஆயினும் 1984 ஆம் ஆண்டிற்கு முன்னர் நாயாறு பகுதியில் 34 சிங்கள குடும்பங்கள் தென்னிலங்கையிலிருந்து மீன் பிடிப்பதற்காக வந்தேறினர். இவர்கள் மீன்பிடித் தொழிலை முடித்துக் கொண்டு தமது சொந்த இடங்களுக்கு சென்று வருவதை பின்னர் வழமையாக கொண்டிருந்தனர்.

இக்காலப் பகுதியில் நாயாறு இறங்குதுறையின் தமிழ் மீனவ குடும்பங்கள் தமது தொழிலை வேறு எங்கும் சென்று மேற்கொள்ளவில்லை. அப்போது நாயாறிலே தொழில் வளம் போதுமானதாக இருந்தது.

ஆனால், தற்போது நாயாறு இறங்குதுறைப் பகுதியில் மீள்குடியேற்றப் பதிவுகளின்றி சட்டவிரோதமாக சுமார் 300 இற்கும் மேற்பட்ட சிங்கள குடும்பங்கள் வாடிகளை அமைத்தும் தமிழர்களின் காணிகளை அபகரித்தும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதால் பூர்வீகமான தமிழ் மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் தென்னிலங்கை சிங்கள மீனவர்கள், தடைசெய்யப்பட்டுள்ள சுருக்கு வலை போன்றவற்றைப் பயன்படுத்துவதோடு பல நுட்பங்களையும் கையாண்டு மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் நாயாறு இறங்குதுறைப் பகுதியின் மீன் வளம் அழிவடைகின்றதால் இதனை நம்பி வாழ்கின்ற தமிழ் மீனவ குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல முடியாத அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

யுத்தத்தால்பாதிக்கப்பட்டுதற்போது மீள்குடியேற்றப்பட்டுள்ள இக்கிராம மக்கள் அனைவருக்கும் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவில்லை. தமது சொந்தப் பணத்தைக் கொண்டு உபகரணங்களை வாங்கி தொழிலில் ஈடுபடும் மக்கள் இவ்வாறு வளங்கள் அழிக்கப்படுவதையும் தொழில் இல்லாமல் போவதையும் எண்ணி கலங்குகின்றனர்.

முல்லை.மாவட்டத்திற்கு நான்கு தடவைகள் மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் வருகை தந்தபோது நாயாறு கிராம மக்களினால் மேற்படி பிரச்சினையை சுட்டிக் காட்டி மகஜர்கள் கையளிக்கப்பட்டதுடன் அப்பகுதி மக்களினால் நேரடியாகவும் பிரச்சினை தெரிவிக்கப்பட்டது.

இதன் பயனாக அமைச்சர் இறுதியாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வருகை தந்தபோது முல்லை.மாவட்ட மீன்பிடி மற்றும் நீரியல்வளத்துறை திணைக்களத்தில் ஒன்றுகூடலை நடத்தி இப்பகுதியில் 1984 ஆம் ஆண்டில் தொழிலில் ஈடுபட்ட 57 படகுகளைத் தவிர ஏனைய படகுகளையும் மக்களையும் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்ப வேண்டுமென முல்லை.மாவட்ட இராணுவ அதிகாரிக்கும் நீரியல்வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கும் முல்லை. மாவட்ட அரச அதிபருக்கும் உத்தரவிட்டார்.

இதன் பின்னர் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீண்டும் குடியேறியுள்ளன.

இந்நிலையில் நாயாறு இறங்குதுறையின் பூர்வீக தமிழ் மீனவர்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளதுடன், அம் மீனவர்கள் இவ்விடத்தை விட்டு வெளியேறும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் உடனடியாக நடவடிக்கை எடுத்து இப்பகுதி மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.(ம-267)

# வடக்கில் 8 ஆயிரம் பேருக்கு அரச நியமனம் வழங்கப்பட்டுள்ளது

## சந்திரகுமார் எம்.பி. பெருமிதம்

(பூந்தோட்டம்)

வட மாகாணத்தில் மிக அண்மையில் 8ஆயிரம் பேருக்கு அரச நியமனம் வழங்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வன்னி தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கும் நிகழ்வு வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

வேறு எந்த மாவட்டத்திலும் வழங்கப்படாத அளவுக்கு வட மாகாணத்தில் அரச நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் 4 ஆயிரத்து 500 பட்டதாரி பயிலுநர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் ஆயிரத்து 100 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்கள் வழங்கப்பட்டதுடன் வட மாகாண சிற்றூழியர் நியமனமாக 189 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டன. அதற்கும் மேலாக நூற்றுக்கணக்கான விசேட செயற்றிட்டங்களூடாக தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வடக்கில் மட்டும் இருந்ததல்ல. ஏனைய மாகாணங்களிலும் இக் கோரிக்கை வலுவாக இருந்திருக்கின்றது.

அவ்வாறான நிலையில் எவ்வாறு வட மாகாணத்திற்கு மட்டும் இவ்வாறு தொடர்ச்சியாக 2008 ஆம் ஆண்டில் ஆயிரம் பேருக்கும் தற்போது 531 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

இன்று இலங்கையைப் பொறுத்தவரையில் இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்புக்காக அலைந்து திரியும் நிலையுள்ளபோது நாம் வடக்கில் வேலைவாய்ப்புக்களை வழங்கி வருகின்றோம். இவ்வாறான செயற்பாடுகளை நீங்கள் சிந்தித்து பார்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நீங்கள் எம்மை பலப்படுத்திய தன் மூலமே அரசிடம் பேசி உங்களுக்கு வேலைவாய்ப்புக்களை எம்மால் பெற்றுத்தர முடிந்தது.

இத்துடன் உங்களுடைய வேலை முடிந்து விடவில்லை. உங்கள் முன் பாரிய பொறுப்பு உள்ளது. உங்களுடைய பிரதேசத்தை ஒளிரச் செய்து உங்கள்



பின்னுள்ள உறவுகளுக்கும்வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அரச வேலையை பெறுவது என்பது சாதாரண விடயம் அல்ல. நீங்கள் நியமனம் வழங்குமாறு கேட்டதற்கிணங்க நாங்கள் கடந்த இரண்டு வருடங்களாக சிரமப்பட்டே இதனை பெற்றுத் தந்துள்ளோம். இதேபோன்று எமது பகுதியில் உள்ள ஏனைய உங்கள் உறவுகளையும் ஒளிர வைக்க வேண்டும். அதற்காக நீங்கள் எம்மைப் பலப்படுத்துங்கள் எனவும் தெரிவித்தார்.

(ம-250-266)




## ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபையினரால் வெற்று தார் பரல்கள் நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு பிரதேச மண்டபத்தில் வைத்து ஏலத்தில் விடப்படவுள்ளது.

ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் மீளளிக்கப்படாத வைப்பு பணமாக 200ரூபாவை கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன் ஏல விற்பனை நடைபெறும் அன்றைய தினம் பரல்களுக்குரிய கட்டணங்களை உடனே செலுத்துவதோடு வெற்று பரல்கள் கொண்டு செல்ல வேண்டும் என கரைதுறைப்பற்று பிரதேச செயலர் சு.ரவீந்திரநாதன் அறிவித்துள்ளார். (3-267)








வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்திய ரி.எம்.சௌந்தரராஜன் நினைவு விழாவில் நினைவுப் பேருரையை நிகழ்த்திய கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சந்திரசேகரன் சசிதரனுக்கு சிவசக்தி ஆனந்தன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற ரி.எம்.எஸின் பாடல்கள் பற்றிய பட்டிமன்ற[illegible] நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- குருமன்காட்டுச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சியா, சுனி முஸ்லிம்கள் இடையே கடும் மோதல்

## நால்வர் உயிரிழப்பு

(கெய்ரோ)

எகிப்தில் சுனி மற்றும் சியா முஸ்லிம் களுக்கிடையில் ஏற்பட்ட கலவரத்தில் நால்வர் உயிரிழந்ததுடன் சுனி முஸ்லிம்களின் தாக் குதலுக்கு இலக்காகி பலர் காயமடைந்துள் ளனர்.

எகிப்தில் சுனி மற்றும் சியா பிரிவு முஸ் லிம்களிடையே மோதல்கள் நடைபெற்று வரும் நிலையில் கெய்ரோ அருகேயுள்ள ஜிஷா மாகாணத்தில் உள்ள ஷாவியத் அபு நகரில் சியா பிரிவினரின் மத திருவிழா நடை பெற்றது.

இதன்போது அங்கு கும்பலாக வந்த சுனி பிரிவினர் திருவிழாவுக்கு வந்தவர்களைத் தாக்கியதுடன் அவர்கள் மீது பெற்றோல் குண்டுகளை வீசி சியா பிரிவினரின் வீடுகளுக்கும் தீவைத்தனர்.

இதனையடுத்து இரு பிரிவினருக்கும் இடையில் மோதல் நிலை உருவாகி அது கலவரமாக வெடித்துள்ளது.

இக் கலவரத்தில் சியா பிரிவைச் சேர்ந்த ஏராளமானவர்கள் காயம் அடைந்ததுடன் அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பல னின்றி அவர்களில் நால்வர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-5)

# லெபனானிலும் இனக்கலவரம்; அதிகாரிகள் உட்பட அறுவர் பலி

(பெய்ரூட்)



லெபனானின் சீடான் பகு தியில் கலவரத்தில் ஈடுபட்ட ஆயுதக் குழுக்க ளின் தாக்குதலுக்கு இலக்காகி அதி காரி கள், இராணுவத்தினர் உட்பட 6 பேர் பலியாகியுள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்துள் ளனர்.

லெபனானைச் சேர்ந்த ஷியாக் களின் ஆயுதக்குழு வான ஹிஸ் புல்லா இயக்கம் சிரியாவின் ஜனா திபதியை ஆதரிக்கத் தொட ங்கியதில் இருந்தே லெபனானிலும் இனக் கலவரங்கள் தொடர ஆரம்பித்துள்ளன.

சிரியா பிரச்சினையால் ஜூன் மாதம் நடை பெறுவதாக இருந்த தேர்தலைக்கூட லெப னான் ஒத்தி வைத்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அங் குள்ள சோதனைச் சாவடி ஒன்றில் சுனி பிரிவி னரின் தலைவர் ஷேக் அஹமது அல் அசி ரின் ஆதரவாளர் ஒருவர் கைது செய்யப்ப ட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த ஏனைய ஆயுத தாரிகள் அங்கிருந்த பாதுகாவலர்களைத் தாக்கியுள்ளனர். மேலும் ஏனையவர்களை யும் வீதிகளில் இறங்கிப் போராடுமாறும் தூண்டியுள்ளனர்.

இதேவேளை பெய்ரூட்டில் இருந்து 40 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சிடா நகர த்தில் சுனி பிரிவைச்சேர்ந்த ஆயுத க்குழு வினர் ஏவுகணை வெடிகளுடனும் இயந்திரத் துப்பாக்கிகளுடனும் கலவரத்தில் ஈடுபட்டு ள்ளனர்.

இந்தக் கலவரத்தின்போது 3 அதிகாரிகள் உட்பட 6 பேர் இறந்துள்ளதாகவும் இராணு வத்தினர் பலர் காயமடைந்ததாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை போராளிகள் தரப்பில் ஆயுத மேந்திய 2 பேர் இறந்துள்ளதாகவும் 13 பேர் காயமடைந்த தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக பின்னர் வெளிவந்த தகவல்கள் குறிப்பிட்டன. (அ-5)

# நிலக்கரி ஊழல் விவகாரம்; அமைச்சர் தாசரி மீது வழக்கு

நிலக்கரி சுரங்க ஊழல் தொடர்பில் முன்னாள் நிலக்கரித்துறை அமைச்சர் தாசரி நாராய ணராவ் மற்றும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் ஜிண்டாலுக்கு எதிராக சி.பி.ஐ. வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

காங்கிரஸ் எம்.பி. நவீன் ஜிண்டாலுக்கு சொந்தமான ஜிண்டால் ஸ்டீல் அன்ட் பவர் லிமிட்டெட் மற்றும் கேகன் ஸ்பாஞ்ச் அயன் லிமிட்டெட் போன்றவை 2008 இல் ஜார்க் கண்ட் மாநிலத்தில் உள்ள அமர்கொண்டா சுரங்கத்தில் நிலக்கரி வெட்டி எடுக்க உரிமம் பெற்றன. இவ்வாறு உரிமம் பெறும்போது போலியான ஆவணங்களை சமர்ப்பித்துள் ளமை நிலக்கரிச்சுரங்க ஊழல் சம்பந்தமான விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து நவீன் ஜிண்டாலுக்கு சொந்தமான நிறுவனம் நிலக்கரிச்சுர ங்க ஒதுக்கீடு உரிமம் பெற்றபோது மத்திய அரசில் நிலக்கரித்துறை அமைச்சராக இருந்த தாசரி நாராயணராவ் மற்றும் நவீன் ஜிண்டாலுக்கு எதிராக சி.பி.ஐ. அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து ள்ளனர்.

இந்நிலையில் ஜிண்டாலிடம் இவ்வாரம் விசாரணை நடத்த முடிவு செய்துள்ளனர். இதேவேளை ஜிண்டாலுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட மையால் சமீபத்தில் அவரது வீட்டில் சி.பி.ஐ அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# சாகசத்தில் ஈடுபட்ட விமானம் நொருங்கியது

(நியூயோர்க்)

அமெரிக்க விமான நிலையமொன்றில் சாகசத்தில் ஈடுபடுத்தப்பட்ட விமானம் விழுந்து நொருங்கி தீப்பற்றியதில் விமான இறக்கை யில் இருந்து சாகசம் நிகழ்த்திய பெண் ஒருவரும் மற்றும் விமானியும் உடல் கருகி பலியாகியுள்ளனர்.

குறித்த சாகச நிகழ்ச்சி அமெரிக்காவில் ஒகியோவில் டயான் சர்வதேச விமான நிலை யத்தில் இடம்பெற்றது. இதன்போது விமான த்தில் இறக்கைகளின் மீது ஏறி ஜேன்விக்கர் என்ற பெண் சாகசம் நிகழ்த்த விமானி சார்லஸ் ஸ்வென்கர் விமானத்தை செலுத்தினார்.

விமான சாகச நிகழ்ச்சி இடம்பெற்றுக் கொண்டு இருந்தபோது திடீரென விமானம் தலைகீழாக பாய்ந்து தரையில் விழுந்து நொருங்கியது. இதனால் விமானம் வெடித்து சிதறி தீப்பற்றி எரிந்தது.

அந்த நெருப்பில் சிக்கி விமானி சார்லஸ் ஸ்வென்கர் மற்றும் விமான இறக்கையில் அமர்ந்து சாகசம் புரிந்த ஜேன்விக்னர் என்ற பெண்ணும் உடல் கருகி பரிதாபமாக உயிரி ழந்தனர்.

ஏராளமான பார்வையாளர் முன்னிலை யில் இடம்பெற்ற இச்சம்பவம் அனைவரை யும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (அ-5)

# இலங். இராணுவத்தினருக்கு பயிற்சி; நாம் தமிழர் கட்சி போராட்டம்




(டில்லி)

வெலிங்டன் இராணுவக் கல்லூரியில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ வீரர் களை வெளியேற்றக் கோரி நாம் தமிழர் கட்சி யினர் மேற்கொண்ட போராட்டத்தில் இலங் கையின் தேசியக் கொடிக்கு தீ வைத்தவர்கள் உட்பட போராட்டத்தில் கலந்து கொண்ட 120 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த போராட்டத்தில் மானக்ஸா பாலம் வழியாக நாம் தமிழர் கட்சியினர் போராடி வருவார்கள் என கூறப்பட்டதைத் தொடர்ந்து அந்த வழியில் பலத்த பாதுகாப்பு வழங்கப் பட்டிருந்தது.

இந்நிலையில் கண்டோன்மெண்ட் வழி யாக இராணுவக் கல்லூரிக்கு அருகே வந்த நாம் தமிழர் கட்சியினரை பொலிஸார் தடுத் துள்ளனர்.

இதனையடுத்து இருதரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனால் இராணுவ வாகன சாலையில் நாம் தமிழர் கட்சியினர் மறியலில் ஈடுபட்டனர்.

மேலும் இலங்கைக் கொடியையும் அவர் கள் தீவைத்து கொளுத்தியதை அடுத்து மறி யலில் ஈடுபட்ட 120 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் இலங்கை இராணுவ வீரர் களுக்கு இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பயிற்சி அளிக்கக் கூடாது என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை வீரர்களுக்கு பயிற் சியளிப்பதற்கு எதிராக போராட்டம் நடத்திய வர்களைக் கைது செய்ததற்கு கண்டனம் தெரிவித்துள்ள வைகோ அவர்களை உடன டியாக விடுவிக்க வேண்டும் என்றும் கேட்டு ள்ளார். (அ-5)

# தொன்மையான மாயன் நகரம் மெக்ஸிகோவில் கண்டுபிடிப்பு

வட அமெரிக்க நாடான மெக் ஸிக்கோவில் மிகவும் தொன்மை வாய்ந்த மாயன் நகரத்தை தொல்பொருள் ஆய்வாளர் கள் கண்டுபிடித் துள்ளனர்.

இந்நகரம் 54 ஏக்கர் பரப்ப ளவு கொண்ட தாகவும் பிரமிடுகளும் மாளிகைகளும் நிறைந் தவையாக இருந்துள்ளது. மெக்ஸி கோவின் தென்கிழக்கே வனப்பகுதியில் இந்த நகரம் புதையு ண்டு கிடந்துள்ளது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்ட நகரம் கி.பி. 600 முதல் கி.பி. 900 ஆண்டுகளுக்கு உட்ப ட்ட காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என வும் இக்காலகட்டத்தில்தான் மாயன் நாகரிகம் முற்றிலுமாக அழிந்து இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

பாதி இடிந்த நிலையில் காணப்படும் பிரமி டுகள் 75 அடி உயரமுள்ளதாக இருக்கின் றன. விளையாட்டுத்திடல், பலிபீடம், வீடுகள், இறந்தவர்களின் நினைவிடங்கள், கடை வீதி கள் உள்ளிட்டவை அந்தநகரில் இருந்துள்ளன.

சிதிலமடைந்த வண்ணம் பூசப்பட்ட சிலை களும் அங்கிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள துடன் அப்பகுதியில் தொடர்ந்து அகழ்வுப் பணி நடைபெற்று வருவதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாயன் நாகரி கம் குறித்து மேலும் பல புதிய தகவல்கள் தெரியவரும் என்று அப்பகுதிக்குச் சென் றுள்ள தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரி வித்துள்ளனர்.

கி.மு.2600 ஆம் ஆண்டில் மத்திய அமெ ரிக்காவில் மாயன் நாகரிகம் தோன்றியுள் ளது. மாயன் மக்கள் கணிதம், வானியல், எழுத்துகளை உருவாக்குவது உள்ளிட்டவற் றில் சிறந்து விளங்கியுள்ளனர். பின்னர் மாயன் நாகரிகம் மெதுவாக அழியத் தொடங்கி யது.

எனினும் அவர்கள் அமைத்த கட்டடங் கள் இப்போதும் மெக்ஸிகோ உள்ளிட்ட நாடுக ளில் உள்ளன. மாயன் இனத்தவரின் நாட் காட்டி முடிவுற்றதை அடுத்துதான் சமீபத்தில் உலகம் அழிய இருக்கிறது என்ற செய்தி பரவியது நினைவுகூரத்தக்கது. (அ-5)

# 4 அணுகுண்டு சக்தியளவுக்கு பூமியை வெப்பம் தாக்குகிறது

நான்கு அணுகுண்டுகளின் சக்தி அளவில் தற்போது பூமியை வெப்பம் தாக்குவதாக அவுஸ் திரேலிய விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் உள்ள குயின்ஸ்லாந்து பல்கலைக்கழக விஞ்ஞானி ஜான்குக் பூமி வெப்பமயமாதல் குறித்த ஆய்வை மேற்கொண் டுள்ளார். அவ்ஆய்வின்படி எப்போதும் இல் லாத அளவுக்கு தற்போது பூமியின் மீது வெப்பம் தாக்குவதாக தெரிவித்துள்ளார். இதற்கு அளவுக்கு அதிகமான காபனீரொட்சைட்டு பூமியின் மேற்பரப்பில் படிந்திருப்பதே காரணமா கும். இதனாலேயே வெப்பம் கடுமையாக உள் ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பா னின் ஹிரோஷிமா நகரம் மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டைப் போன்று 4 அணுகுண்டுகள் வீசினால் ஏற்படும் அளவுக்கு வெப்பம் அதிகரித் துள்ளதாகவும் இந்த வெப்பம் பூமியின் மீது ஒவ்வொரு விநாடியும் தாக்குவதாகவும் குறிப்பி ட்டுள்ள அவர் இதே நிலை இன்னும் சில ஆண்டு கள் நீடித்தால் நிலைமை என்ன வாகும் என நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை எனத் தெரிவித்துள்ளார். இதேவேளை பூமியை தாக்கும் 90 சதவீதமான வெப்பம் கடலுக்குள்ளேயே செல்வதாகவும் இதனால் பனிமலைகள் மற்றும் விலங்கினங்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையின் துடிப்பிலே தோல்வி என்ற சொல்லுக்கு இடமேயில்லை.

- லைட்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் உணர்வோடு வாழுங்கள் இப்போதைக்கு அதுபோதும்!

ஈழத்தமிழர்களை போர் ஆயுதம் கொண்டு அழித்தார்கள் என்று மட்டும் யாரும் நினைத்து விடக்கூடாது.

மாறாக வேறு பல வழிகளிலும் தமிழினத்தைச் சிதைப்பதற்கான செயற்பாடுகள் நடந்துகொண்டே இருக்கின்றன.

அதில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவ முகாம்களை அமைப்பது, சட்டவிரோத குடியேற்றங்களைஉருவாக்குவது, தமிழர்களின் வாழ்நிலங்களைக்கபளீகரம்செய்வதுஎன்பனஒருவகை.

மறுவகையாக தமிழர் பிரதேசங்களில் கலாசார சீரழிவுக்கான விதைகளைத் தூவி அவற்றை முளைவிடச் செய்வதன்மூலம், எங்கள் தாய் மொழி தமிழ், எங்கள் தாயகம் வடக்குக் கிழக்கு, எங்கள் இனம், எங்கள் மொழி என்ற உணர்வுகளை அழிப்பது என்றவாறு பல்வகை முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த முயற்சிகளில் அவர்கள் வெற்றிபெற்று வருகிறார்கள் என்பதையும் மறுத்துவிட முடியாது.

இவ்வாறு போர் தந்த வடுக்கள் என்பதற்கப்பால், போருக்குப் பின்பாக எங்கள் மீது நடத்தப்படுகின்ற ஒருவகை நச்சேற்றத்திலிருந்து எங்கள் மக்களைக் காப்பாற்றுதல் என்பது, எங்கள் அனைவர் முன்னும் இருக்கக்கூடிய மிக முக்கியமான பணியாகும்.

ஒருகாலத்தில் இந்த மண்ணில் இருந்த சைவ ஆலயங்கள் அந்நிய ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்டன. ஆனாலும் அந்நியர்களின் அழிப்பு நோக்கம் எடுபடவில்லை.

அதற்கான காரணம் அந்நிய ஆட்சியாளர்கள் சைவாலயங்களை உடைத்துவர, சைவ மக்கள் உடனடியாக அந்த ஆலயங்களை புனரமைத்தது அல்ல. அத்தகையதொரு நிகழ்வுக்கு அங்கு இடமே இருக்கவில்லை.

அந்த முயற்சியில் சைவமக்கள் ஈடுபட்டிருந்தால், அவர்கள் முழுமையாக அழிக்கப்பட்டு இருக்கக்கூடிய வாய்ப்புக்களும் இருந்திருக்கும்.

எனவே, அன்றைய காலத்தின் சைவசமயத் தலைவர்கள் அத்தகையதொரு சம்பவத்துக்கு இடம்கொடுக்காமல் காலம் கனியும்வரை காத்திருந்தார்கள்.

காலத்தின் கனிவுக்கு நீண்டகாலம் எடுத்த தாயினும் அவர்கள் செய்ததெல்லாம் சைவ மக்களை சைவ சமயிகளாக வாழ வைத்ததமையாகும்.

உண்மையில் இந்த மண்ணில் சைவ ஆலயங்கள் உடைக்கப்பட்ட பின்னரே சைவமக்கள் சமயத்தின்பால் அளவு கடந்த பற்றும் அன்பும் நேசமும் கொண்டனர்.

தங்கள் சமய அனுட்டானங்களை எவ்வாறேனும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் திட சங்கற்பம் பூண்டனர்.

இதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்ற சைவசமயத் தலைவர்கள் மூல காரணமாக இருந்தனர்.

அந்நியர் ஆட்சியில் ஒவ்வொரு சைவ சமயத்தவனிடமும் சைவம் வாழ்ந்தது. அவனின் இதயத்தில் இறைவன் குடியிருத்தப்பட்டான்.

இந்த உயரிய மனத்திடத்தினாலேயே சைவ சமயத்தை அந்நியர்களால் அசைக்கமுடியாமல் போயிற்று. இந்தக் காரணத்தை - இந்த வரலாற்றை நாம் அறிந்து கொண்டால்,

இப்போது நமக்குத் தேவை நாங்கள் தமிழர்கள் என்ற அசைக்கமுடியாத மனத்திடமாகும். தமிழன்என்றமூச்சுஉள்ளும்புறமும்இருக்குமாயின்,

இப்போது, மாணவர்கள் மத்தியில் போதைவஸ்துப் பாவனையென்ற வேதனைக்கு இந்தக் கணமே கல்லறை கட்டி அதில் புல்லும் முளைவிடச் செய்யலாம்.

அன்புக்குரிய எம்மாணவச் செல்வங்களே! நீங்கள் அன்பான தமிழ்க் குழந்தைகள். எவரின் வலையிலும் வீழ்ந்து விடாமல் உங்கள் தமிழ் அன்னைக்கு நல்ல பிள்ளைகளாக வாழுங்கள். இப்போதைக்கு அதுபோதும் தமிழ்வாழ.

## விளக்கமறியல் கைதிக்கு எதிராக சிறைச்சாலை நிர்வாகம் முறைப்பாடு

(கரவெட்டி)

பல கொள்ளை, களவு வழக்குகளுடன் தொடர்புடையவர் என யாழ்.சிறைச்சாலையில் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிக்கு எதிராக யாழ். சிறைச்சாலை நிர்வாகத்தினரால்; கப்பம் கோருதல் கையடக்கத் தொலைபேசி பாவித்தல், கைதிகளைத் தாக்குதல், சக கைதிகளின் உறவினர்களிடம் மிரட்டிப் பணம் பறித்தல் போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பல கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடையவர் என பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த ரட்ணசிங்கம் சந்திரகுமார் என்ற கைதிக்கு எதிராகவே இவ்வாறு நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றிற்காக கொண்டுவரப்பட்ட மேற்படி கைதியை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பருத்தித்துறை நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் நேற்று மன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது சிறைச்சாலை உத்தியோகத்தரினால் கைதிக்கு எதிராக நீதவானிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இதையடுத்து; நீதவான் குறித்த கைதியை விசாரணை செய்தபோது யாழ். சிறைச்சாலை பிரதான ஜெயிலில் தன்னை தனிப்பட்ட முறையில் பழிவாங்குவதாகவும் தனிச் செல்லில் அடைத்து வைப்பதாகவும் நீதவானிடம் கைதி முறையிட்டார்.

அதற்கு நீதவான், அரச பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் எவரும் தமது சொந்தப் பகையை பணியில் காட்ட முடியாதெனவும் அவ்வாறு காட்டினால் அது தண்டிக்கப்பட வேண்டிய விடயம். நீங்கள் குற்றம் புரியாமல் சிறைச்சாலை நிர்வாகத்தினால் இத்தனை குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது. எனவே நீங்கள் இவ்வாறு தொடர்ந்து செயற்பட்டால் வெளிமாவட்ட சிறைச்சாலைக்கு உங்களை மாற்ற வேண்டிய நிலை ஏற்படுமெனவும்கைதிக்கு கூறினார்.

இதையடுத்து குறித்த கைதி தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ம- 24)

## திருவேங்கடேஸ்வரர் குடமுழுக்கு திருவிழா

(இணுவில்)

இணுவில் திருப்பதி திருவேங்கடேஸ்வரர் ஆலயத்தின் குடமுழுக்கு விஞ்ஞாபனம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி 27 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதற்கமைய நாளை புதன்கிழமை காலை 7 மணிமுதல் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதலும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9.30 முதல் 11 மணிவரை மஹாசம்ப்ரோசஷணமும் இடம்பெறவுள்ளதாக ஆதீன கர்த்தா ச.கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

## குடிநீர் கிணற்றினுள்ளும் கழிவு ஓயில் வீச்சு

### விசமிகள் கைவரிசை

வடமராட்சி கரவெட்டி அத்துழு அம்மன் கோயிலடிப் பகுதியிலுள்ள குடிதண்ணீர் கிணற்றினுள் விசமிகள் சிலர் கழிவுப் பொருட்களை வீசி அசுத்தமாக்கியுள்ளனர்.

மேற்படி பகுதியிலுள்ள குடிதண்ணீர்க் கிணற்றினுள் ஒயிலை ஊற்றி உள்ளதுடன், குப்பைகளையும் போட்டு குடிநீரை நாசப்படுத்தியுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள சுமார் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீருக்காக அத்துழு அம்மன் கோயிலடி கிணற்றினையே பயன்படுத்துகின்றனர்.

தற்போது இப்பகுதி மக்கள் 2 மைல் தூரத்திற்கு அப்பால்சென்று அரசடிகோயில் கிணற்றைப் பயன்படுத்துகின்றனர்.

அத்துழு அம்மன் கோயிலடியிலுள்ள குடி தண்ணீர் கிணற்றினுள் ஏற்கெனவே இரு தடவைகள் இவ்வாறான அசுத்தப் படுத்தும் சம்பவம் இடம்பெற்றபோது கரவெட்டி பிரதேச சபையினரால் கிணறு இறைத்துக் கொடுக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-60)

## நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட விளிசுட்டி சங்கானையைச் சேர்ந்த புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மாணவி ஒருவருக்கு அரச நிறுவனங்களின் 2-ம் கட்ட நிதியுதவியாக 29 ஆயிரத்து 810 ரூபா மக்கள் வங்கியின் சங்கானை கிளையினூடாக குறித்த மாணவியின் தாயாரின் கணக்கில் நேற்றுமுன்தினம் வைப்பு செய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்துள்ளார். (செ)

## குருசேத்திரம் ஆடற்கதை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நாட்டியப் பேராசான் கலைஞர் வேல் ஆனந்தனின் நெறியாள்கையில் வவுனியா மாவட்ட ஆடல் அணியினர் வழங்கும் குருசேத்திரம் கீழைத்தேய ஆடற்கதை நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார். (செ-11)

## இரு பெண்களை ஏமாற்றி திருமணம் செய்த குடும்பஸ்தர்

### பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி

(கரவெட்டி)

ஒரே பெயருடைய இரு பெண்களை திருமணம் செய்த குடும்பஸ்தரை 25 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த பெண்ணொருவரை முதலாவதாகத் திருமணம் செய்த குடும்பஸ்தர் சில ஆண்டு காலம் அவருடன் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த, முதல் மனைவியின் பெயரையுடைய வேறொரு பெண்ணையும் ஏமாற்றித் திருமணம் செய்துள்ளார்.

இந்நிலையில் இரண்டாவது மனைவியால் பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த குடும்பஸ்தரை கைது செய்த பொலிஸார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

நீதிமன்றம் குறித்த குடும்பஸ்தரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த குடும்பஸ்தரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபரை 25 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல அனுமதித்தனர்.

இதேவேளை, குறித்த குடும்பஸ்தர் களவு வழக்கு ஒன்றிற்காக தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-3, 24)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### நீங்கள் நல்லவர்தான்!



✦ சமயம் என்கிற கறவை மாடு பல தடவை உதைத்திருக்கலாம். ஆனால் அதை நாம் பொருட்படுத்தவேண்டாம். ஏனென்றால் அது நமக்கு நிறையப் பால் தருகிறது. பால் கொடுக்கும் பசுவின் உதையை பாற்காரன் பொருட்படுத்தமாட்டான்.

✦ நாம் அனைவரும் ஒளி தரும் விளக்குகள். விளக்கு எரிந்து ஒளி காட்டுவதுதான் நம் வாழ்க்கை எனக் கொள்ளப் படுகிறது.

✦ கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார் என்ற உண்மையை அனைவரும் உணரவேண்டும்.

✦ கடவுளிடம் ஒன்றையும் வேண்டாதீர்கள். வேண்டுதல் ஒரு பலவீனம். இதனால் நாம் பிச்சைக்காரர்களாகி வருகிறோம். நாம் அனைவரும் ராஜகுமாரர்கள் என்பதை உணர்ந்து கொள்வோம்.

✦ பலவந்தமாகச் செய்யப்படும் சீர்திருத்த முயற்சிகள் எப்போதும் பயன் தருவதில்லை. நீங்கள் அனைவருமே நல்லவர்தான். இன்னும் நல்லவராக முயலுங்கள்.

✦ அன்பு ஒருபோதும் பிறரைக் குறைகூறுவதில்லை. பேராசைதான் பிறரைக் குறை சொல்லி மகிழ்கிறது. அதில் நேர்மையோ நியாயமோ இருப்பதில்லை. எனவே ஆசையை ஒதுக்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கான்ஃபெடரேஷன் கிண்ணக் காற்பந்து

# இத்தாலியை வீழ்த்தியது பிரேசில்

பிஃபா கான்ஃபெடரேஷன் கிண்ணக் காற்பந்து போட்டியில் பிரேசில் அணி. தனது கடைசி லீக் ஆட்டத்தில் 4-2 என்ற கோல் கணக்கில் இத்தாலியை வீழ்த்தியது.

இதன்மூலம் அரையிறுதியில் பலம் வாய்ந்த ஸ்பெயின் அணியை சந்திக்கும் வாய்ப்பை தவிர்த்தது பிரேசில். இதனால் அரையிறுதியில் பிரேசில், உருகுவேயையும், இத்தாலி, ஸ்பெயினையும் சந்திக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

ஃபிஃபா கான்ஃபெடரேஷன் கிண்ணக் காற்பந்து போட்டி பிரேசிலின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் சல்வடார் டி பாஹியா நகரில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பிரேசிலும், இத்தாலியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பாதி ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் (45 ஆவது நிமிடம்) பிரேசிலின் டான்டே கோலடித்தார். இதனால் முதல் பாதி ஆட்டநேர முடிவில் பிரேசில் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

எனினும் 2ஆவது பாதி ஆட்டம் தொடங்கிய 6ஆவது நிமிடத்தில் (51ஆவது நிமிடம்) இத்தாலியின் இம்மானுவேல் கோலடிக்க, 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலை ஏற்பட்டது. 55ஆவது நிமிடத்தில் நெய்மர் கோலடிக்க, பிரேசில் மீண்டும் முன்னிலை (2-1) பெற்றது. இதன் பிறகு 66 மற்றும் 88ஆவது நிமிடங்களில் பிரேசிலின் ஃபிரெட் கோலடிக்க, இத்தாலிக்கு மேலும் பின்னடைவு ஏற்பட்டது. 71ஆவது நிமிடத்தில் இத்தாலிக்கு 2ஆவது கோல் கிடைத்தது. இந்த கோலை ஜியார் ஜியோ அடித்தார். எனினும் இத்தாலியால் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை.

பிரேசிலின் நெய்மர் ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

**மெக்ஸிகோ வெற்றி**

மற்றொரு லீக் ஆட்டத்தில் மெக்ஸிகோ 2-1 என்ற கோல் கணக்கில் ஜப்பானை தோற்கடித்தது.

முதல் 2 ஆட்டங்களிலும் தோற்றிருந்த மெகஸிகோ, இந்த ஆட்டத்தில் ஜப்பானை வீழ்த்தி ஆறுதல் தேடிக்கொண்டது.

**பிரேசில் முதலிடம்**

'ஏ' பிரிவு லீக் சுற்று ஆட்டங்கள் சனிக்கிழமையுடன் முடிந்தன. பிரேசல் அணி 3 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று 9 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தது. இத்தாலி 6 புள்ளிகளுடன் (2 வெற்றி) 2ஆவது இடத்தையும், மெக்ஸிகோ 3 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தையும், ஜப்பான் அனைத்து ஆட்டங்களிலும் தோல்வி கண்டு கடைசி இடத்தையும் பிடித்தன.

பிரேசில், இத்தாலி அணிகள் தங்களின் முதல் இரு ஆட்டங்களில வெற்றி கண்டபோதே, அரையிறுதியை உறுதி செய்துவிட்டன. மெக்ஸிகோ, ஜப்பான் அணிகள் போட்டியிலிருந்து வெளியேறிவிட்டன.

# தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவராக சீனிவாசன்



சூதாட்ட சர்ச்சைகாரணமாக இந்திய கிரிக்கெட் சபை தலைவர் பதவியில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருந்தாலும் கடும் நெருக்கடிகளுக்கு மத்தியில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் (டிஎன்சிஏ) தலைவராக என். சீனிவாசன் தொடர்ந்து 12ஆவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஐபிஎல் சூதாட்ட சர்ச்சையில் சீனிவாசனின் மருமகன் குருநாத் மெய்யப்பன் கைதானதைத் தொடர்ந்து சீனிவாசன் பதவி விலக வேண்டும் என்று பெரும் நெருக்கடி மூண்டது. நிலைமை மோசமானதால் தலைவர் பொறுப்பிலிருந்து விலகியிருப்பதாக அறிவித்தார். இதையடுத்து ஜக்மோகன் டால்மியா இடைக்கால தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த நிலையில் சென்னையில் நடந்த தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் 83 ஆவது வருடாந்த பொதுக் குழுக்கூட்டத்தில் சங்கத்தின் தலைவராக போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டார் சீனிவாசன். சீனிவாசனின் நெருங்கிய நண்பரான காசி விஸ்வநாதன் செயலாளராக 7ஆவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.



## ஆஸி.பயிற்சியாளர்

# மிக்கி ஆதர் நீக்கப்பட்டார்

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். முக்கியமான ஆஷஷ் தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அவர் திடீரெனப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத்திற்காக இங்கிலாந்து சென்ற அவுஸ்திரேலிய அணி, தற்போது ஆஷஷ் தொடருக்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையிலேயே இந்த அதிரடிப் பதவி விலக்கல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தத் தவறியிருந்த அவுஸ்திரேலிய அணி, ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளிலும் அதிக பிரச்சினைகளைச் சந்தித்து வந்தது. இந்தியாவில் வைத்து டெஸ்ட் தொடரை 0-4 என்ற கணககில் இழந்த அவுஸ்திரேலிய அணி, சமபியன்ஸ் கிண்ணத் தொடரில் குழு நிலையோடு வெளியேறியிருந்தது. அத்தோடு, இந்தியாவில் வைத்து 4 வீரர்கள் ஒழுக்கக் குறைபாடுகள் காரணமாக போட்டித் தடைக்கு உள்ளானதோடு, இங்கிலாந்தில் வைத்து இங்கிலாந்து வீரரை முகத்தில் அறைந்ததன் காரணமாக டேவிட் வோணருக்குப் போட்டித்தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தச்சம்பவங்களைத் தொடர்ந்து, ஆஷஷ் தொடர் ஆரம்பிக்க 16 நாட்களே உள்ள நிலையில் மிக்கி ஆர்தர் திடீரெனப் பதவியிலிருந்து விலககப்பட்டுள்ளார். 2015ஆம் ஆண்டு வரை அவருக்கான ஒப்பந்தம் காணப பட்டபோதிலும், அவர் பதவி விலக்கப்பட்டுள்ளார்.

மிக்கி ஆர்தருக்குப் பதிலாக பயிற்றுவிப்பாளராக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் டெரன் லீமன் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ரசிகர்களின் கோரிக்கை




இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண இறுதி போட்டி மழை காரணமாக 6 மணித்தியாலங்கள் தடைப்பட்டது. இதனால் ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்டு 20 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.
இந்நிலையில் போட்டியைக் காண வந்த ரசிகர்கள் 'மழையே தயவுசெய்து சென்று விடு' என்ற உருக்கமான கோரிக்கையை முன்வைத்தார்கள் வருணபகவானுக்கு.

# மோசமான பெறுபேறுகளுக்கு நான் பொறுப்பேற்க முடியாது

## பாக்.கிரிக்கெட் பிரதம தேர்வாளர்



சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் மோசமான பெறுபேறுகளுக்குப் பொறுப்பேற்றுப் பதவி விலக முடியாது என பாகிஸ்தான் அணியின் பிரதம தேர்வாளர் இக்பால் ஹாசிம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானின் மோசமான பெறுபேறுக்காக தேர்வாளர்களைப் பதவி விலகுமாறு கோருவது நியாயமற்றது எனவும் தெரிவித்தார.

இங்கிலாந்தில் இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்திய நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள இக்பால் ஹாசிம், பாகிஸ்தான் அணியின் பெறுபேறுகளுக்காகத் தேர்வாளர்கள் பதவிவிலகவேண்டுமெனக் கூறுவது நியாயமற்றது எனக் கருதுவதாகத் தெரிவித்தார். குறித்த தோல்விகளுக்கான பொறுப்பை தேர்வாளர்கள் மாத்திரமன்றி அனைவரும் ஏற்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அணி சிறப்பாகச் செயற்படுமாயின் கிரிக்கெட் சபை, தேர்வாளர்கள், அணி நிர்வாகம் ஆகியன பாராட்டைப் பெறுகின்றனர் எனக் குறிப்பிட்ட இக்பால் ஹாசிம், தோல்விகளின்போதும் அவ்வாறே அனைவரும் பொறுப்பேற்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்த பாகிஸ்தான் அணியில் போதுமான அனுபவம் காணப்பட்டிருந்ததாகவும் அதன் காரணமாக அதில் இடம பெற்றிருந்த வீரர்கள் சிறப்பாகச் செயற்படுவார்கள் என எதிர்பார்த்ததாகவும் குறிப்பிட்டார்.

# தோனியின் சாதனைப் பயணம்

மினி உலகக் கிண்ணப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் ஐசிசியின் முக்கிய சம்பியன் கிண்ணங்களை வென்ற ஒரே கிரிக்கெட் தலைவர் என்ற பெயரை தோனி பெற்றார்.

2007ஆம் ஆண்டு 20 ஓவர் உலக கிண்ணத்தையும், 2011ஆம் ஆண்டு 50 ஓவர் உலக கிண்ணத்தையும் தோனி கைப்பற்றியிருந்தார். தற்போது சம்பியன்ஸ் கிண்



ணத்தையும் வென்று உள்ளார். இந்திய அணி தோல்வி எதையும் சந்திக்காமல் 5 ஆட்டத்தில் வென்று கிண்ணத்தை வென்றது. ஐ.பி.எல். சூதாட்ட சர்ச்சைக்கு பிறகு இந்திய அணி விளையாடிய முதல் போட்டித் தொடரிலேயே கிண்ணத்தை வென்று அசத்தியிருக்கிறது.

# உத்தரகாண்ட் பேரழிவில் பலியானவர்களுக்கு தங்க மட்டையை சமர்ப்பணம் செய்தார் தவான்



ஐசிசி சம்பியன் கிண்ண போட்டியில் தான் பெற்ற தங்க மட்டையை உத்தரகாண்ட் பேரழிவில் பலியானவர்களுக்கு சமர்ப்பணம் செய்வதாக அறிவித்துள்ளார் ஷிகர் தவான். ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில், சிறப்பாக விளையாடி இங்கிலாந்தை வீழ்த்தியது இந்தியா.

இத்தொடரில் 363 ஓட்டங்கள் எடுத்து சிறப்பாக விளையாடிய ஷிகர் தவானை கௌரவிக்கும் விதமாக அவருக்கு 'தங்க மட்டை" பரிசளிக்கப்பட்டது. இதைப் பெற்றுக்கொண்டு அதற்கு நன்றி தெரிவித்த ஷிகார் தவான்.

எனது திறமைக்காக வழங்கப்பட்ட இந்த தங்க துடுப்பு விருதை உத்தரகாண்ட் வெள்ளத்தில் உயிரிழந்தோருக்கு சமர்பிக்கிறேன். அங்கு தவிக்கவிடப்பட்டுள்ளவர்கள் விரைவில் வீடு திரும்ப வேண்டி நான் பிரார்த்திக்கிறேன் என்று உணர்ச்சி பொங்கக் கூறினார். ஏற்கனவே, இதுபோன்று, டில்லி பேருந்தில் கற்பழித்துக் கொல்லபட்ட மருத்துவ மாணவிக்காக யுவராஜ் சிங் தனது விருதை வழங்கியதும், கொல்கத்தா மருத்துவமனை தீவிபத்தில் பலியானவர்களுக்கு மனோஜ் திவாரி தனது விருதை சமர்ப்பித்ததும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியின் புதிய பயிற்றுவிப்பாளராக டெரன் லீமன் தெரிவு



அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பிரதம பயிற்றுவிப்பாளராக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் டெரன் லீமன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் அண்மைக்காலப் பெறுபேறுகள் சிறப்பான நிலையில் காணப்படாததோடு, ஒழுக்கப் பிரச்சினைகளிலும் அவுஸ்திரேலிய அணி தடுமாறி வந்த நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

மிக்கி ஆர்தர் பதவி விலக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவருக்குப் பதிலாக டெரன் லீமன் இலகுவான தெரிவாக அமைந்ததாக அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அவுஸ்திரேலியாவின் உள்ளூர்ப் போட்டிகளிலும், பிறிஸ்பேர்ண் ஹீற் அணியிலும், அவுஸ்திரேலிய "ஏ" அணியிலும் பயிற்றுவிப்பாளராக டெரன் லீமன் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தார்.

டெரன் லீமனின் சிறப்பான பெறுபேறுகள் காரணமாக அவருக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை, அவர் இந்தப் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றுவார் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் தலைவரான மைக்கல் கிளார்க், தேர்வாளராக தனது பொறுப்பிலிருந்து விலகியுள்ளமையும் இதில் குறிப்பிடத்தக்கது.

தன்னைத் தேர்வாளர் பொறுப்பிலிருந்து விலக்குமாறு மைக்கல் கிளார்க் இந்தியத் தொடருக்குப் பின்னர் கேட்டுக் கொண்டதாகவும், அவரது கோரிக்கை தற்போது ஏற்கப்பட்டுள்ளதாகவும் அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# இந்திய அணி வீரர்களுக்கு ரூ. ஒரு கோடி பணப் பரிசு




சம்பியன் கிண்ணத்தை வென்ற இந்திய அணி வீரர்களுக்கு தலா ரூ. 1 கோடி பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த இறுதிச்சுற்றில் இந்திய அணி, இங்கிலாந்தை 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

இதையடுத்து இந்திய அணியில் இடம் பெற்றிருந்த வீரர்கள் அனைவருக்கும் அதிர்ஷ்டம் அடித்துள்ளது.

இது தொடர்பாக பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், முதன்முதலாக சம்பியன்ஸ் கிண்ணத்தை இந்திய அணி வென்றுள்ளது. இதனை பாராட்டி இந்திய அணியில் இடம் பெற்றவர்களுக்கு வெகுமதி அளிக்கப்பட உள்ளது.

இதையடுத்து அணி வீரர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 1 கோடி பரிசும், அணியில் இல்லாத மற்ற வீரர்களுக்கு ஆறுதல் பரிசாக ரூ.30 லட்சமும் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.



அண்மையில் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற மாகாண மட்ட உடற்பயிற்சி போட்டியில் முதலாம் இடத்தினை பெற்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியர் கல்லூரி உடற்பயிற்சி அணியினரையும் கல்லூரி அங்கத்தவர்களையும் படத்தில் காணலாம்.

# விம்பிள்டன்: பெடரர் அடுத்த சுற்றில்

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் தொடரில், நடப்பு சம்பியனும் சுவிட்சர்லாந்தின் முன்னணி வீரருமான ரோஜர் பெடரர், 2-ம் சுற்றுக்கு முன்னேறினார். நேற்று நடைபெற்ற முதல் சுற்று போட்டியில் ரோஜர் பெடரர், 6-3, 6-2, 6-0 என்ற செட்கணக்கில் ரோமானியாவின் விக்டர் ஹானஸ்க்யூவை வென்றார்.

கடந்த 10 ஆண்டுகளில் 7 முறை விம்பிள்டன் பட்டத்தை வென்றுள்ள பெடரர், இந்த முறையும் வென்று புதிய சாதனை படைக்க திட்டமிட்டுள்ளார். ஆனால் இந்த முறை அவருக்கு காலிறுதியில் கடும் சவால் காத்திருக்கிறது. காலிறுதியில் அவர் ரபேல் நடாலை எதிர்கொள்ள வாய்ப்பு உள்ளது.

மற்றொரு ஆட்டத்தில் குரேஷிய வீரர் மரின் சிலிச், சைப்ரஸ் நாட்டின் பாத்தாதிசை வென்று 2-ம் சுற்றுக்கு முன்னேறினார்.

முன்னதாக நடைபெற்ற மகளிர் ஒற்றையர் முதல் சுற்று போட்டியில் 5-ம் தரநிலை வீராங்கனை சாரா எரானி, போர்ட்டோ ரிகோவின் இளம் வீராங்கனை மோனிகாவிடம் 3-6, 2-6 என்ற நேர்செட்களில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

இதேபோல் செர்பியாவின் அனா இவானோவிக், முதல் சுற்றில் பிரான்சின் விர்ஜினி ரசானோவை 7-6(1), 6-0 என்ற செட்கணக்கில் வென்றார். காயத்தால் ஏற்பட்ட வலியையும் பொருட்படுத்தாமல் சிறப்பாக ஆடிய பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அசரென்கா, முதல் சுற்றில் போர்ச்சுக்கல் நாட்டின் கோஹியரை 6-1, 6-2 என்ற நேர்செட்களில் வீழ்த்தி 2-ம் சுற்றுக்கு முன்னேறினார். அடுத்த சுற்றில் அவர் இத்தாலியின் பிளேவியா பென்னட்டாவை சந்திக்க உள்ளார்.



மாகாண மட்ட கராத்தே போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியை சேர்ந்த மு.சுகிர்தன் முதலாம் இடத்தினையும் மு.முரளி இரண்டாம் இடத்தினையும் பெற்றனர். அவர்களையும் கல்லூரி உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

# வட மாகாண பெருவிளையாட்டு போட்டி

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வட மாகாணப் பாடசாலைகளின் பெரு விளையாட்டு அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப்போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மேற்படி போட்டிகளில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் 23ஆம் திகதி முதல் நடைபெற்றது.

15 வயதுப் பிரிவில் முதலிடத்தினை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் இரண்டாமிடத்தினை மன்னார் சென்.அன்ரனீஸ் மத்திய மகா வித்தியாலய அணியும் மூன்றாமிடத்தினை சண்டிலிப்பாய் இந்து கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன.

17 வயதுப் பிரிவில் முதலிடத்தினை அராலி சரஸ்வதி வித்தியாலயமும் இரண்டாமிடத்தினை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தினை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப்பிரிவில் முதலிடத்தினை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் இரண்டாமிடத்தினை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தினை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன.

# வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி சண்டிலிப்பாய் யூனியன் இறுதியில்

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் அழைக்கப்பட்ட வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டிக்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் சண்டிலிப்பாய் இந்து கல்லூரி அணியும் தெரிவாகியுள்ளன.

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை தமது 175 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இப்போட்டியினை கடந்த வெள்ளிக்கிழமை 21ஆம் திகதி முதல் நடத்தி வருகின்றது.

இதில், மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் அராலி சரஸ்வதி வித்தியாலய அணியும் மோதுகின்றன.

இறுதிப்போட்டி, மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

# கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ். மாவட்ட பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளின் இறுதிப்போட்டிகள் மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் பிற்பகல் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

மெய்வல்லுநர் போட்டிகளில் ஆண்களில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் சம்பியனாகவும், பெண்களில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் சம்பியனாகியது.

தடகள மற்றும் பெரு விளையாட்டுக்கள் அனைத்திலும் அதிக புள்ளிகளைப் பெற்ற நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் சம்பியனாகியது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா கலந்துகொண்டார்.

# பெண்களுக்கான துடுப்பாட்ட போட்டி சுழிபுரம் விக்ரோரியா சம்பியன்

வட மரகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப்போட்டிகளின் மூன்றாம் கட்ட போட்டிகள் வவுனியாவில் நடைபெற்றது.

பெண்களுக்கான துடுப்பாட்டபோட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி தான் பங்கு கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில பெண்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்டம் 2010-ம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்டது.அன்றிலிருந்து இவ்வருடம் வரை தொடர்ச்சியாக நாலாண்டுகள் மாகாண மட்டச் சம்பியன்களாக விக்ரோறியாக் கல் லூரியே வெற்றி பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இறுதிப் போட்டியில் விக்ரோறியாக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துடன் போட்டியிட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 58 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது.பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி மிக இலகுவாக தனது இலக்கை அடைந்து 8 விக்கட்டுக்களினால் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை வெற்றிகொண்டு தொடர்ச்சியாக நாலாவது வருடமாக சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் கடத்தல்; நால்வர் கைது!

தமிழகத்தில் அகதி முகாம்களில தங்கியிருக்கும் இலங்கை அகதிகள் 60 பேர் அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்ல முயன்றபோது தமிழக கியூ பிரிவுப் பொலிஸாரால கைது செய்யப்பட்டுள்ளனர்.

கியூ பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவலொன்று கிடைத்திருந்தது. இதன் அடிப்படையில், நாகை கீச்சாங்குப்பம் பகுதியில் மீன்பிடி விசைப்படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் புதிதாக இருந்த மர்ம படகு ஒன்றை பொலிஸார் கைப்பற்றினர். இது குறித்து விசாரணை செய்த பொலிஸாருக்கு திடுக்கிடும் தகவல் தெரியவந்தது.

பொலிஸாரிடம் சிக்கிய மர்ம படகு நாகை மாவட்டம் செருகூரை சேர்ந்த ஒருவருக்கு சொந்தமானது என்றும் அந்த படகில் 60 இலங்கை அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு கடத்தி செல்ல முயன்றதும் பின்னர் அவர்களை கடத்திச் செல்லும் முயற்சியை கைவிட்டதும் தெரியவந்தது.

இலங்கை அகதிகளை கடத்தி செல்ல முயன்ற 3 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் படகு உரிமையாளரும் கைது செய்யப்பட்டார். இவர்கள் நாகை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நாகை கிளை சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் 6-ந் திகதி புதுச்சேரியின் காரைக்கால் அருகே ஒரே விசைப் படகில் தப்பிச் செல்ல முயன்ற 120 பேரைகடற்படையினர் கைது செய்தமைகுறிப்பிடத்தக்கது.(செ-11)

## காணி சுவீகரிப்பு...

விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மானுக்கு சொந்தமானது என்ற காரணம் காட்டி இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்டம் உட்பட வட மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த காணிகள் , வீடுகள் மற்றும் ஏனைய சொத்துக்களை அரச உடைமையாக்கும் நடவடிக்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் இராணுவத்தினரால் மும்மரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.(செ-6)


**பிரதேச செய்தியாளர்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2013**

வலம்புரி நாளிதழில் பிரதேச செய்தியாளர்களாகக் கடமையாற்றும் பொருட்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களிடம் (ஆண்கள் மட்டும்) இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

செய்தித்துறையில் ஆர்வமும் விருப்பமும் கொண்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 21 வயதை அடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தாம் செய்தியாளராக இருக்க விரும்பும் இடத்தைக் குறிப்பிடுவது அவசியம்.

பொருத்தமான விண்ணப்பதாரிகள் கீழ்வரும் மாதிரி விண்ணப்பத்திற்கு அமையும் வண்ணம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர் வரும் 10.07.2013 ற்கு முன்னதாக

பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச செய்தியாளருக்கான விண்ணப்பம் - 2013" எனத் தவறாது குறிப்பிடவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி

மாதிரி விண்ணப்பம்

**பிரதேச செய்தியாளர்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2013**

முழுப் பெயர் :- ....................................
நிரந்தர முகவரி :- ....................................
தபால் முகவரி (தேவையாயின்):- ....................
தொலைபேசி இலக்கம் :- ..............................
பிறந்த திகதி :- ....................................
தே.அ.அ.இல. :- ....................................
கி.சே.பிரிவும் இலக்கமும் :- ........................
பிரதேச செயலர்பிரிவு :-..............................
செய்தியாளராகக் கடமையாற்ற விரும்பும்
ஊரின் பெயர் :- ....................................
மாவட்டம் :- ....................................
தற்போது செய்யும் தொழில் :- ........................
கல்வித் தகைமை :- ..................................
முன் அனுபவம் (இருப்பின்) :- ........................
ஏனையவை :- ....................................

..................  ..........................
திகதி  கையொப்பம்



**1st in Com, GAQ** யாழ்ப்பாணம்

**பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

- A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில்மூன்று பாடம்சித்தி அடைந்தவர்கள் விண்ணப் பிக்கமுடியும்.
- புதிய ஆண்டிற்கான விரிவுரைகளும் பதிவுகளும் ஆரம்பமாகி விட்டன.

குறிப்பு:

1)பேராதனை பல்கலைக்கழகத்தில் கடந்த வாரம் வெளிவந்த G.A.Q. பரீட்சை முடிவுகளின் படி சித்தி அடைந்த மாணவர்களுக்கான கலைமாணி (B.A) க்கான விரிவுரைகள் ஆரம்பம்: 29.06.2013 காலை 8 மணி

2) விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக் கான தங்குமிட வசதி இலவசம்.

விபரங்கட்கு எஸ்.அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரிய குளம் சந்தி.
யாழ்ப்பாணம்.

(சி-3756)


## '13' குறித்துப்...

திருத்தச் சட்டத்தினை நீக்குவது உட்பட்ட பல விடயங்களை இரண்டு நாடுகளின் உயர் மட்ட அதிகாரிகள் ஆராயவுள்ளனர். எமது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு செல்லும்போது இந்த விவகாரம் பற்றி பேசுவார்.

அவர் அதனை பேசமாட்டரென்று யாரும் கூறமுடியாது. அதே போல் எமது வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் கூட வெகுவிரைவில் இலங்கை புறப்படவுள்ளார். அவரும் அதைப் பற்றியே பேசுவார்.

இவர்கள் இந்த விடயங்கள் குறித்து கொழும்புடன் பேசுவார்களென எமது பிரதமர் அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடந்த சந்திப்பிலும் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, அதைப் பற்றிய சந்தேகம் வேண்டாம். இந்தியா அதனை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது" என்று தெரிவித்தார் இந்திய மத்திய இணையமைச்சர் நாராயணசாமி. (செ-11)

## இன்னொரு...

எதிராக இந்தியா எந்த தீர்மானத்தை மேற்கொண்டாலும் இந்தியாவை தவிர்த்து இலங்கைக்கு சீனா மாற்றுத் தெரிவாகவுள்ளது.

எனவே இலங்கை தமிழர் பிரச்சினையில் நாம், இலங்கை அரசாங்கத்துடன் சமரசமாகத் தான செல்ல வேண்டும். இல்லையேல் அது இந்தியாவின் எதிரிகளைப் பலப்படுத்துவதாக அமையும்.

இந்தியா ஏற்கெனவே பாகிஸ்தானால் பல பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது. இன்னொரு பாகிஸ்தானாக இலங்கை உருவெடுப்பதை யாரும் விரும்பமாட்டார்கள்.அதை இந்தியாவும் விரும்பாது.

உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களின் உணர்வுகளை இந்திய மத்திய அரசு புரிந்து கொண்டுள்ளது.

தமிழர்களினதும் அவர்களது சொத்துக்களினதும் பாதுகாப்பையும் இந்தியா கவனத்தில் கொள்கிறது. இந்த விவகாரம் அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும்.

இலங்கைக்கு எதிரான எந்த தீர்மானங்களையும் எடுப்பதற்கு முன்னதாக, இந்திய- இலங்கை உறவு குறித்தும் தமிழ் மக்களின் நலன் குறித்தும் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த நிலையில் இலங்கை விடயத்தில் இந்தியா எந்த தீர்மானத்தை மேற்கொண்டாலும், அது இலங்கையில் உள்ள தமிழர்களையும் இந்தியாவில் அகதிகளாக உள்ள இலங்கை தமிழர்களையும பாதிப்பதாக அமையும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## இலங்கை...

பல்வேறு அரசியல் கட்சி சார்பில் வெலிங்டன் இராணுவ முகாம் முற்றுகையிடும் போராட்டமும் நடைபெற்றது.

இந்த நிலையில், வெலிங்டின் இராணுவ பயிற்சி முகாமை இன்று முற்றுகையிடப்போவதாக மதிமுக பொதுச் செயலாளர் வைகோ அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே, வெலிங்டன் இராணுவ பயிற்சி முகாமில் இருந்த இலங்கை இராணுவ அதிகாரிகள் 2 பேரும் பெங்களூருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் இருவரும் விரைவில் கொழும்பை வந்தடைவார்கள்.(செ-11)

## கிரிக்கெட்டில் பாதுகாப்பு...

நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று பிரித்தானியாவிடம் இலங்கை அரசாங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

அத்துடன், இலங்கை அணி வீரர்களுக்கு பாதுகாப்பு அளிக்குமாறு ஏற்கெனவே கோரப்பட்டிருந்தும் அதனைப் பிரித்தானியா அலட்சியப்படுத்தியுள்ளதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சம்பியன் கிண்ணப்போட்டியின் அரையிறுதிப் போட்டியில் இலங்கை - இந்திய அணிகள் கடந்த வியாழக்கிழமை காடிவ் மைதானத்தில் போட்டியிட்டன. இதன்போது புலம்பெயர் தமிழர்கள் சிலர் இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து புலிக்கொடியுடன் மைதானத்துக்குள் ஓடியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து போட்டி நிறைவடைந்தவுடன் இலங்கை வீரர்கள் பேருந்தில் ஏறியபோது புலம்பெயர் தமிழர் இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தும்படியும், பாதுகாப்பு கேள்விக் குறியானமை தொடர்பிலும் அறிக்கை ஒன்றை பிரித்தானியாவிடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

இந்தச் சம்பவங்களையடுத்து சம்பியன் கிண்ணப் போட்டிக்காக பிரித்தானிய அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் குறைபாடு நிலவியுள்ளது என கிறிக் இன்போ இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

போட்டிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை பிரித்தானியாவின் ஜீ.எவ்.எஸ் என்ற பாதுகாப்பு சேவை நிறுவனம் மேற்கொண்டிருந்தது. லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இந்த நிறுவனமே செய்திருந்த நிலையில் பல விமர்சனங்கள் எழுந்தன. இதனைத் தொடர்ந்து அதன் பிரதானி நிக் பகல்ஸ் ராஜினாமா செய்தார்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாக பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதரகத்தினூடாக நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளோம் என்றும், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிடம் இச்சம்பவம் குறித்து அறிக்கை ஒன்றைக் கோரியுள்ளோம் எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம கூறியுள்ளார்.

அதேவேளை, லண்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற அவுஸதரேலிய - இலங்கை அணிகளுக்கு இடையிலான போட்டியின் பின்னர் மைதானத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்த புலம்பெயர் தமிழர்கள் மீது இலங்கை அரசின்ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


**தவறிவிட்டது**

முக்கிய ஆவணங்கள் பல அடங்கிய File பாக் ஒன்று புதுக்குடியிருப்பு பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கும் மந்துவில் சந்திக்கும் இடையில் நேற்றுத் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0778496660 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தரவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(சி-3759)


## மாகாண முறை...

ஆளும் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, ராஜித சேனாரத்ன, திஸ்ஸ விதாரண, டியு குணசேகர, சந்திரசிறி கஜதீர உள்ளிட்ட அமைச்சர்கள் பலரும் இந்த ஊடக சந்திப்பில் பேசினார்கள்.

இவர்களோடு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், ஈபிடிபி தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் கலந்துகொள்வார்கள் என்றும் ஊடகவியலாளர்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

**அரசாங்கம் தொடர்ந்தும் ஏமாற்றுகிறதா?**

"ஒன்றிணைந்த நாட்டுக்குள் அதிகாரங்களைத் தமிழர்களுக்கு பகிர்ந்தளிப்பதாக கடந்த காலங்களில் சிலர் கூறினார்கள். விடுதலைப்புலிகள் இருக்கிறபடியால் தான் தாங்கள் எதிர்ப்புப் தெரிவிப்பதாக அவர்கள் கூறினார்கள். அவர்கள் இருக்கும்போது அதிகாரங்களை பகிர்ந்தளித்தால் புலிகள் நாட்டை பிரித்துவிடுவாரகள் என்று பிரசாரம் செய்தார்கள். இப்போது புலிகள் இல்லை. ஏன் அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும் என்று அதே நபர்கள் இன்று கூறுகிறார்கள்" என்றார் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன.

உலகில் பல நாடுகளில் பிரிவினைக் கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்ட பின்னர் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையையும் அமைச்சர்கள் இங்கு சுட்டிக்காட்டினார்கள்.

தமிழர் தரப்பு தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கத் தரப்பால் ஏமாற்றப்பட்டு வந்துள்ளதாகவும் அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

"காணி அதிகாரம் கொடுத்துவிட்டு பின்னர் காணிகள் ஆணைக்குழு மூலம் ஜனாதிபதி ஜேஆர் அதனைப் பறித்துக்கொண்டார். பொலிஸ் அதிகாரத்தையும் கொடுத்துவிட்டு பொலிஸ் ஆணைக்குழு மூலம் அதனையும் பறித்துவிட்டார்" என்றும் அமைச்சர் ராஜித கூறினார்.

இதேவேளை, வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தக்கூடாது என்றும் மாகாண சபைகளுக்கு உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பறித்துவிட வேண்டும் என்றும் ஆளும் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிலுள்ள விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியும் கடும்போக்கு பௌத்தவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சம்பூர்...

அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வரும் சூழ்நிலையில் இந்தச் செயற்பாடுகள் முடிந்த பின்னரே சம்பூர் அனல் மின் நிலையம் குறித்து ஆராய அது தீர்மானித்துள்ளது.

இதன்படி சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் மேற்கொள்ளவிருக்கும் கொழும்புப் பயணமும் பிற்போடப்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய அரசமைப்பின் முக்கியமான திருத்தங்கள் செய்து முடிக்கப்படும் வரை இந்திய அரசின் உயர்மட்டப் பிரதிநிதிகள் எவரும் இலங்கை வரும் வாய்ப்புக்கள் குறையுமென்பதையே இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்டங்கள் குறிப்பிடுகின்றன.

இதற்கிடையில் சம்பூரில் அனல மின் நிலையத்தினை அமைக்கும் பொறுப்பை தங்களிடம் தருமாறு மற்றுமொரு நாடு இலங்கையிடம் தொடர்ச்சியான கோரிக்கைகளை விடுத்து வருவதாகவும் அறிய முடிகின்றது. (செ-11)


**கார் விற்பனைக்கு**

பருத்தித்துறையில் Nissan Sunny V.15 சில்வர் நிற A/C கார் விற்பனைக்குண்டு.
இல.KA - XXXX
சனி, ஞாயிறு தினங்களில் நேரில் பார்வையிடலாம்.
**தொடர்புகளுக்கு:**
**0770760717**

(சி-3756)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org